வடக்கிற்கான கைத்தொழில் துறைகள் மன்றம்







# ஆண்டறிக்கை

## 2022/2023

# வடக்கிற்கான கைத்தொழில் துறைகள் மன்றம்

# (NCI)

## ஆண்டறிக்கை

## 2022/2023

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| *தலைவரின் செய்தி* | *01* |
| *ஆசிய பசுபிக் வியாபார கூட்டமைப்பின்* (OAV) *செய்தி* | *02* |
| OAV □*வடமாகாண இணைப்பாளரின் செய்தி* | *03* |
| *பணிக்குழு சபை இயக்குநர்கள்* | *04* |
| NCI *இயக்குநர் குழு சுயவிபரம்* | *05* |
| *எங்கள் அடையாளத்தின் அடிப்படை* | *07* |
| *எங்கள் பார்வை பணி மற்றும் சுலோகம், உறுப்பினர் விபரங்கள்* | *08* |
| NCI *சேவைகளின் விரிவான கண்ணோட்டம்* | *09* |
| MoUs *மற்றும் ஒப்பந்தங்கள்* | *10* |
| *உலகளாவிய சர்வதேச தூதர்களுடனான தொடர்புகள்* | *10* |
| NCI *நடவடிக்கைகளின் கண்ணோட்டம்* | *14* |
| *திட்ட நடவடிக்கைகளின் கண்ணோட்டம்* | *20* |
| NCI *திறன் மேம்பாடு* | *29* |
| *நிதிநிலைத் தகவல்* | *32* |

# தலைவரின் செய்தி



வடக்கிற்கான கைத்தொழில் துறைகள் மன்றத்தின் முதல் வருடாந்த பொதுக் கூட்டம் 2024ம் திகதி நடைபெறவுள்ளது. அதில் தலைவரின் செய்தியை வழங்குவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். 2007ஆம் ஆண்டின் இலங்கை நிறுவனங்கள் சட்டம் எண் 7 இன் கீழ் எமது மன்றம் GA00267269 என்ற நிறுவன பதிவு எண்ணுடன் 2022 நவம்பர் 24ம் திகதி இணைக்கப்பட்டது. மன்றத்தின் அனைத்து நடவடிக்கைகளிலும் தொடர்ச்சியான வளர்ச்சியைக் கண்டதுடன் இலங்கையில் உள்ள பல மன்றங்கள் மற்றும் சங்கங்களுடன் இணைந்து செயல்பட்டதன் மூலம் மிக உயர்ந்த ஒருமைப்பாடு மற்றும் ஒருங்கிணைப்பு நிலையை அடைந்துள்ளது.

நிபுணத்துவத்துடன் நிர்வகிக்கப்படும் எங்கள் மன்றம் இலங்கையின் பல அமைச்சுகள், அரசுத்துறைகள், வெளிநாட்டு தூதரகங்கள் மற்றும் உயர் ஆணையங்கள் ஆகியவற்றால் நன்கு அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

நாம் மன்ற நடவடிக்கைகளில் எங்கள் கடந்த தனிப்பட்ட அனுபவங்களை அங்கீகரித்து, ஜேர்மன் நிறுவனமான OAV, (ஜேர்மன் ஆசிய - பசிபிக் வணிககூட்டமைப்பு) இன் உதவி மற்றும் வழிகாட்டுதலுடன், வணிக உறுப்பினர் அமைப்பு (BMO) எனும் திட்டத்தை செயல்படுத்துகிறோம். இந்த திட்டத்திற்கு பொருளாதார நிறுவனம் மற்றும் மேம்பாட்டுக்கான மத்திய அமைச்சகம் (FederalMinistryforEconomicCorporationandDevelopment) நிதியளிக்கின்றது. மேற்கண்ட திட்டத்திற் கான எங்கள் கூட்டு நிறுவனமாக மகளிர் தொழிற்துறை மற்றும் வர்த்தக சம்மேளனம் (WCIC) காணப்படுகின்றது.

இந்நிகழ்வில், தனியார் துறையில் தங்களின் பரந்த அறிவு மற்றும் அனுபவத்துடன், எங்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கவும், மன்றத்தின் வளர்ச்சியில் எல்லா நிலைகளிலும் எங்களுடன் இணைந்து பணியாற்றவும் தெற்காசிய பிராந்திய முகாமையாளர் (OAV) கிமோரா க்ளக் மற்றும் OAV நிறுவனத்தின் வட பிராந்திய இணைப்பாளர் மிரியம் ஹெட் ஜர் ஆகிய இருவரும் எங்களுடன் இருப்பது எங்களுக்கு ஒரு பெரும்பேறு.

சிறு மற்றும் நடுத்தர தொழில்துறை (SME) முயற்சியாளர்களை ஊக்குவிப்பதில் எங்கள் வழக்கமான பிணையக் கூட்டங்கள், பட்டறைகள், கருத்தரங்குகள், மாநாடுகள், தொழிற்சாலை பார்வையிடல்கள், கண்காட்சி பார்வையிடல்கள் மற்றும் பிற பயிற்சி திட்டங்கள் நிச்சயமாக பெரும் பங்களிப்பைச் செய்துள்ளன. எங்கள் உறுப்பினர்களின் தொழில் முனைவு வளர்ச்சிக்கு உகந்த சூழலை உருவாக்கவும், அவர்களின் அனைத்து வணிக நடவடிக்கைகைளயும் மேம்படுத்தவும் இவை உதவியாக இருந்துள்ளன. இச்சமயத்தில், சபை நடவடிக்கைகளின் வெற்றிக்கு எல்லா வகையிலும் மதிப்புமிக்க ஆதரவைத்தந்த அமைச்சர்கள், உயர் ஆணையர்கள், தூதர்கள், அரசு சாரா அமைப்புகள், யாழ்ப்பாண பல்கைலக்கழக விரிவுரையாளர்கள் மற்றும் அரசு அதிகாரிகளுக்கும் எனது நன்றியைத் தெரிவித் துக்கொள்கின்றேன். எதிர்காலத்திலும் தொடர்ச்சியான ஆதரைவ அனைவரிடமிருந்தும் தாழ்மை யுடன் வேண்டுகின்றேன்.

நன்றி

**கே.பூரணச்சந்திரன்**

# ஜேர்மன் ஆசிய - பசுபிக் வணிக கூட்டமைப்பு (OAV)

## தெற்காசிய பிராந்திய முகாமையாளர்  - கிமோராவிடமிருந்து செய்தி



**இரண்டாம் கட்ட வணிக உறுப்பினர் அமைப்பு திட்டம்**

மதிப்பிற்குரிய NCI உறுப்பினர்களே,

ஜேர்மன் கூட்டாட்சி பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டு அமைச்சு (BMZ) ஆதரவோடு இயங்கும் வணிக உறுப்பினர் அமைப்பு (BMO) இரண்டாம் கட்டத்திற்கு NCI மற்றும் மகளிர் தொழிற்துறை மற்றும் வர்த்தக சம்மேளனத்துடன் பணியாற்றுவதைவிட்டு (WCIC) நாங்கள் மகிழ்ச்சி அடைகின்றோம்.

இந்த திட்டத்தின் இரண்டாம் கட்டம் 2026ஆம் ஆண்டு அக்டோபர் இறுதிவரை நீடிக்கும். மேலும் இலங்கையின் வடக்கு மாகாணத்தில் உள்ள சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களில் உள்ள தொழில் முனைவோர்களான உங்களுக்காக பொருளாதார நிலைமைகளை மேம்படுத்துவதே எங்கள் இலக்கு. இதில் குறிப்பாக பெண் நிறுவனர்கள், முகாமையாளர்கள் மற்றும் தொழில் முயற்சியாளர்களுக்கு ஆதரவு வழங்குவதில் கவனம் செலுத்தப்படுகிறது. இந்த இலக்குகளை அடைவதற்காக NCI மற்றும் யாழ்ப்பாணத்தில் உள்ள WCIC கிளையுடன் இணைந்து பணியாற்றி இந்த இரண்டு நிறுவனங்களையும் வலுப்படுத்த இருக்கின்றோம். இரண்டு மன்றங்களும் உங்கள் திறன்களை, செயல்பாடு மற்றும் வலையமைப்பபை மேம்படுத்த நிறுவனத்தின் உறுப்பினர்களான உங்களின் தேவைகளை திறம்படவும் திறமையாகவும் பூர்த்தி செய்வதே இதன் நோக்கமாகும்.

2023 ஜனவரி முதல் அக்டோபர் வரையிலான முந்தைய பரீட்சார்த்த திட்டத்தில் பங்காளிகள் தொடர்புடைய நடவடிக்கைகளை மிகவேகமாக செயல்படுத்தும் திறனைமட்டுமல்ல, அவர்கள் ஒருவருக்கொருவர் எவ்வளவு துணையாக இருக்கிறார்கள் என்பதையும் நிரூபித்தனர். NCI அண்மையில் தான் நிறுவப்பட்டது என்றாலும் அது பலமான உறுப்பினர்களையும் வடக்கு பகுதியில் தொடர்புகளையும் பிராந்தியத்தில் வலுவாக பதிந்திருத்தலும் மிகுந்த உத்வேகம் கொண்ட பணிக்குழு சபையையும் கொண்டுள்ளது.

மறுபுறம், உலகிலேயே முதல் மகளிர் தொழிற்துறை மற்றும் வர்த்தக சம்மேளனமாக இலங்கையில் இயங்கிவரும் பழமையான மகளிர் தொழிற்துறை மற்றும் வர்த்தக சம்மேளனமாகவும் இருக்கும் WCIC, வர்த்தகசபை நடவடிக்கைகளில் தங்களது நீண்டகால அனுபவத்தை நிரூபிக்கப்பட்ட நடைமுறைகள் மற்றும் சேவைகளை பெண்களுக்கான குறிப்பான கவனத்தையும் மற்றும் வடக்கு மாகாணத்தில் NCI இன் வலையமைப்பில் இருந்து பெறக்கூடிய சாத்தியத்தையும் கொண்டு வருகின்றது.

இந்த ஆற்றலைக் கட்டியெழுப்புவதையும், எல்லாவற்றிற்கும் மேலாக NCI மற்றும் யாழ்ப்பாணத்தில் உள்ள WCIC இன் கிளை ஆகிய இரண்டிலிருந்தும் நிறுவன மேம்பாடு, சேவை வழங்கல்கள் மற்றும் பரிந்துரைகள் ஆகிய மூன்று பகுதிகளை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளோம். மீண்டும்ஒருமுறை NCI மற்றும் WCIC உடனான BMO கூட்டுறவின் இந்த இரண்டாம் கட்டத்தைத் தொடங்குவதற்கு எங்களின் உண்மையான உற்சாகத்தை வெளிப்படுத்து கிறோம். இலங்கையின் வடக்கு மாகாணத்தில் பொருளாதார நிலைமைகளை மேம்படுத்துவதற்கு நாங்கள் ஒன்றாக உறுதி பூண்டுள்ளோம்.

ஆதரவுக்கும் பங்கேற்புக்கும் நன்றி

தங்கள் உண்மையுள்ள
**கிமோரா க்ளக்**
தெற்காசிய பிராந்திய முகாமையாளர்
OAV - ஜேர்மன் ஆசிய - பசிபிக் வணிக கூட்டமைப்பு

# BMO திட்டத்தை வடமாகாணத்தில் அமுல்படுத்தும் நிபுணரின் செய்தி



அன்புள்ள NCI இயக்குநர்கள் CEO மற்றும் அன்பான உறுப்பினர்களே,

உங்களுடன் மற்றும் மகளிர் தொழிற்துறை மற்றும் வர்த்தக சம்மேளனம் (WCIC) உடன் இணைந்து BMO திட்டத்தின் இரண்டாம் கட்டத்தில் காலடி எடுத்து வைத்திருக்கின்றேன்.

இந்த கூட்டுத்திட்டத்தின் முதன்மை நோக்கமானது எதிர்வரும் மூன்று வருடங்களுக்குள் இலங்கையின் வடக்கு மாகாணத்தில் உள்ள சிறிய நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களையும் அவர்களுடைய பொருளாதார நிலைமைகளையும் மேம்படுத்துவதாகும்.

ஒக்டோபர் 2023 இல் முடிவடைந்த எங்கள் முதல் கட்ட அமுலாக்கத்தில் வடக்கிற்கான கைத்தொழில் துறையின் இயக்குநர்கள் மற்றும் CEO பற்றி நான் நன்கு அறிந்து கொண்டேன். 2023 ஜனவரியில் மிகவும் அர்ப்பணிப்பும் ஆர்வமும் கொண்ட குழு ஒன்று உருவாக்கப்பட்டது. அவர்கள் அனைவரும் ஒரே இலக்கை நோக்கி பயணித்தார்கள். அதாவது இலங்கையின் வடக்கு மாகாணத்தில் உள்ள வணிகங்கள் மற்றும் தனிப்பட்ட தொழில்முனைவோரின் நிலைமையை மேம்படுத்துவதே அதுவாகும்.

அனைத்து NCI உறுப்பினர்களும் அனுபவம் வாய்ந்த தொழில் முயற்சியாளர்கள் என்பதால் வணிகத் துறைகளின் பல்வேறு பகுதிகளிலும் வடக்கு மாவட்டத்திலுள்ள ஐந்து மாவட்டங்களிலும் செயலில் ஈடுபடுவதால், தொழில் முயற்சியாளர்கள் எதிர் கொள்ளக்கூடிய தேவைகள் பிரச்சைனைகள் மற்றும் போராட்டங்கள் பற்றி அவர்களால் புரிந்து கொள்ளக் கூடியதாகவுள்ளது. CEO வின் விரிவான பணி அனுபவம் மற்றும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களின் திட்டங்களை கையாளும் திறன் என்பன NCI அணியின் திறமைகளை மேலும் மெருகூட்டச் செய்கின்றது.

NCI இன் மிகப் பெரிய வலைப்பின்னல், எண்ணற்ற தனிப்பட்ட தொடர்புகள் மற்றும் வணிகம் சார்ந்த வலைப்பின்னல்களுடன் தொடர்புடைய அரச நிறுவனங்கள் மற்றும் நலன்விரும்பிகள் பல் வேறு தேசிய மற்றும் சர்வதேச வணிக இலாப நோக்கற்ற நிறுவனங்களுடனான நீண்டகால உறவுகள் நீண்ட சாதனைகளை நிறுவுவதற்கான உறுதியான தளத்தை உருவாக்குவதோடு வடக்கு தொழில் முனைவோரின் பிரச்சனைகளை பரிந்துரை செய்வதற்கும் அதனை விருத்தி செய்வதற்கும் உறுதுணை புரிகின்றது.

அங்கத்தவர்களின் தனிப்பட்ட வணிகம் சார்ந்த தேவைகள் கூட NCI இனால் அவர்களுக்கு பொருந் தக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டு கடந்த காலங்களில் வழங்கப்பட்டன. அந்த வகையில் முதன்மையான முன்னோடித்திட்டமானது கடந்த காலத்தில் யாழ்ப்பாண பல்கலைக் கழகத்துடன் இணைந்து கூட்டாக செயற்படுத்தப்பட்டது. கள விஜயங்கள், வலைப்பின்னல் நிகழ்வுகள் மற்றும் பிற தனிப்பட்ட சேவைகளும் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டுள்ளன. NCI மற்றும் WCIC உறுப்பினர்களுக்கான தொடர்புடைய சேவைகளை மேலும் மேம்படுத்தல் திறன்களை வளர்த்தல் மற்றும் தொழில் முறைப் பயிற்சிகளை வழங்குதல் ஆகியவை BMO திட்டத்திற்கு உள்ள இலக்காகும்.

BMO திட்டத்தின் முதல் கட்டத்தில் எங்கள் வேலையை என்னால் அர்ப்பணிப்புடன் செய்ய முடிந்தது காரணம் NCI குழுவினரால் நான் மிகவும் அன்புடன் வரவேற்கப்பட்டேன். கலாச்சாரங் களுக்கிடையேயான புரிதல் மற்றும் தொழில்முறை பரிமாற்றம் நேர்மையான ஆர்வம் மற்றும் ஒருவருக்கொருவர் கற்றுக்கொள்ள விருப்பம் ஆகியவை நேர்றையான மற்றும் மகிழ்ச்சியான பணிச்சூழலை உருவாக்கியது.

நமது சிறப்பான பயணத்தை தொடர்வோம்

**மிரியம் ஹெஜர்**
***இலங்கையின் வடக்கு மாகாண BMO திட்டத்தினை அமுல்படுத்தும் நிபுணர்***


# Board Of Directors & CEO



Chariman
**Mr. K Pooranachandran**



Vice Chariman
**Mr. S Naguleswaran**



Director
**Mr. N Uruthiramoorthy**



Director
**Mr. S Piratheepan**



Director
**Ms F Jesmin Jeyamalar**



Director
**Mr. R Piratheep**



Director
**Mr. P Piratheepan**



Director
**Mrs. U Rubini**



Director
**Mr. A Geethashagilan**



Director
**Mr. V Gnanamoorthy**



Director
**Mr. A S Dilan**



CEO
**Mr. V K Piremanandan**

# NCI இயக்குநர் குழு சுயவிபரம்

### திரு. க. பூரணச்சந்திரன்

திரு. பூரணச்சந்திரன் Star Industrial Services (Pvt) Ltd நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப் பாளர் ஆவார். அவர் Bio Tech நிறுவனத்தின் பணிப்பாளராகவும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழ கத்தில் தொழிநுட்ப பீடத்தின் பணிப்பாளராக வும் யாழ் மாவட்ட அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தின் பணிப்பபளராகவும் பணியாற்று கின்றார். திரு. பூரணச்சந்திரன் இலங்கையின் மொரட்டுவ பல்கலைக்கழகத்தில் மின் பொறி யியளாளராக பட்டம் பெற்றார். லண்டனில் உள்ள புருனல் பல்கலைக்கழகத்தில் உயர் கல்வியை முடித்தார். தொழிற்சாலைகளுககான ஆலை மற்றும் இயந்திரங்களின் முன்னனி உற்பத்தியாளர் ஆவார்.

### திரு. ச. நகுலேஸ்வரன்

திரு. சங்கரப்பிள்ளை நகுலேஸ்வரன் NCI இன் துணைத் தலைவராக உள்ளார். மேலும் யாழ் மாவட்டத்திலுள்ள பங்குடமை வணிக நிறுவன மான Nutri Food Packers மற்றும் பிராந்திய பெறுமதி சேர் விவசாய பொருட்களின் உற்பத்தி யாளர்கள் மற்றும் ஏற்றமதியாளர்களின் நிர்வாக பங்காளியாகவும் பணியாற்றுகின்றார். அவர் உணவு பதப்படுத்தும் தொழில்களில் 40 ஆண்டு களுக்கும் மேலான அனுபவம் கொண்டவர் மற்றும் அவர் பழங்கள் மற்றும் காய்கறிகள் பதப்படுத்தலில் புதுமை மேம்படுத்தல் சந்தை வாய்ப்பு ஆகியவற்றில் வெற்றியும் பெற்றுள்ளார்

### திரு. ந. உருத்திரமூர்த்தி

திரு. உருத்திரமூர்த்தி அடம்பன் Organic Farm (Pvt) Ltd நிறுவனத்தின் நிறுவுனர் இயக்குநர் ஆவார். மன்னார் ஹோட்டல் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர். குழந்தைகள் கல்வி உதவி மன்றத்தின் இயக்குநர் மற்றும் Rotary Club மன்னார் கிளையின் துணைத் தலைவராகவும் பணியாற்றுகின்றார் மேலும் யாழ்ப்பாண பல்கலைக்கழகம் மற்றும் தொழிநுட்ப கல்லூரி யில் விரிவுரையாளராகவும் பணியாற்றியுள்ளார். சுவிட்ஸ்சலாந்தில் உள்ள கணினி அறிவியல் கல்வித் திட்டத்தின் இயக்குநராகவும் பணி யாற்றியுள்ளார். சுவிட்ஸ்சலாந்தின் Basel Freiplatzaktion இன் நீண்டகால இணைத் தலைவர் மற்றும் UNHCR நிறுவனத்தில் panel பேச்சாளர். 24 ஆண்டுகளாக சுவிட்ஸலாந்தில் உள்ள மருந்து நிறுவனத்தில் IT மேலாளராக பணியாற்றி யுள்ளார். பிற துறைகள் மொழிபெயர்ப் பாளர் எழுத்தாளர் புத்தக வெளியீட்டாளர் மென் பொருள் தயாரிப்பாளர் சமூக ஆர்வலர் என பல்வேறு துறைகளில் தேர்ச்சி பெற்றவர் ஆவார்.

### திரு. ச. பிரதீபன்

முல்லைத்தீவு மாவட்த்தை பிரதிநிதிதுவப் படுத்தும் பணிப்பாளர்களில் ஒருவராக இவர் இருக்கின்றார். இவர் SPK Rock (PVT) Ltd Alura (Pvt) Ltd மற்றும் IRDG (Pvt) Ltd ஆகியவற்றின் முகாமைத்துவ பணிப்பாளராகவும் கடமை யாற்றுகின்றார். மேலும் முல்லைத்தீவு கைத் தொழில் மன்றத்தின் செயலாளராகவும் உள்ளார். சமூக அபிவிருத்தி அமைப்பின் பணிப்பாளர் சபையில் ஒருவராகவும் முல்லைத்தீவு பொது வைத்தியசாலை நலன்புரி அமைப்பின் உள்ளக கணக்காய்வாளராகவும் கடமையாற்றுகின்றார்.

### செல்வி பிரான்ஸிஸ் ஜெஸ்மின் ஜெயமலர்

பிரான்ஸிஸ் ஜெஸ்மின் ஜெயமலர் Nature Wins (Pvt) Ltd இன் இணை நிறுவுநர் ஆகவும் மற்றும் நிர்வாக இயக்குநராகவும் இருக்கினறார். இவர் Institute for Research & Development (Pvt) Ltd இன் நிறுவுநர் மற்றும் தலைவரும் ஆவார். வடக்கு மற்றும் மலையகத்திலுள்ள பல சமூக அடிப்படையிலான நுண்நிலை நிறுவனங்களுக்கு வணிக பயிற்சி மற்றும் இயந்திர உதவிகளை வழங்கி வருகின்றார். பொறியியல் இளங்கலை ஆற்றல் தொழிநுட்பத்தில் முதுகலை டிப் ளோமா மற்றும் வணிக நிர்வாகத்தில் முதுகலை டிப்ளோமா ஆகியவற்றைப் பெற்றுள்ளார்.

### திரு. இரா. பிரதீப்

திரு. இராஜதுரை பிரதீப் NCI இன் இயக்குநர் குழுவில் ஒருவராக இருக்கின்றார். இவர் யாழ் மாவட்டத்தின் நெல்லியடியிலுள்ள டைட்டானிக் உணவகத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் ஆவார். இவர் ஒரு சான்றிதழ் பெற்ற சமையல் கலை நிபுணராகவும் Titanic IT Solutions இன் உரிமையாளராகவும் இருக்கின்றார். இவர் நெல்லியடி வர்த்தக சங்கத்தின் பணிப் பாளர் சபையில் ஒருவராகவும் இருக்கின்றார்.

### திரு. பி. பிரதீபன்

திரு. பிரதீபன் NCI இன் இயக்குநர் குழுவில் ஒருவராக இருக்கின்றார். இவர் தீபன் Hardware மற்றும்Oyster Lanka (Pvt) Ltd நிறுவனத்தின் நிர்வாக இயக்குநராகவும் இருக்கின்றார். இவர் 2011 ஆம் ஆண்டு முதல் தனது தொழிலை வெற்றிகரமாக நடாத்தி வருகின்றார். இவர் Speed Management Services (Pvt) Ltd இன் முன்னாள் இயக்குநர் ஆவார்.

### திருமதி ரூபினி உதயகுமார்

திருமதி ரூபினி உதயகுமார் NCI இன் இயக்குநர் குழுவில் ஒருவராக இருக்கின்றார். இவர் ANK Exports (Pvt) Ltd மற்றும் ANK Farm Imports & Exports ஆகியவற்றின் நிர்வாக இயக்குநாராகவும் உள்ளார். உள்ளூர் தயாரிப்பாளர்கள் சங்கமான சஞ்சீவி நிறுவனத்தின் உறுப்பினர்களில் ஒருவராகவும் உள்ளார். இவர் 2019 ஆம் ஆண்டு முதல் தனது தெகாழிலை வெற்றிகரமாக நடாத்தி வருகின்றார்.

### திரு. விக்னேஸ்வரமூர்த்தி ஞானமூர்த்தி

திரு விக்னேஸ்வரமூர்த்தி ஞானமூர்த்தி NCI இன் இயக்குநர் குழுவில் ஒருவராக இருக்கின்றார். இவர் Dry Food Products (Pvt)Ltd Go Natural நிறுவனத்தன் நிர்வாக இயக்குநராக உள்ளார். மேலும் இவர் சமூக ஆராய்ச்சி அறிவியல் மையத்தின் உறுப்பினராகவும் உள்ளார். Multimedia வில் டிப்ளோமா படிப்பை முடித்துள்ளார். இவர் 2017 ஆம் ஆண்டு முதல் தனது தொழிலை வெற்றிகரமாக நடாத்தி வருகின்றார்.

### திரு. அ. கீதாசாகிலன்

திரு. கீதாசாகிலன் NCI இன் இயக்குநர் குழுவில் ஒருவராக இருக்கின்றார். இவர் லிங்கன் ஐஸ்கிறீம் நிறுவனத்தின் உரிமையாளரும் ஆவார். இவருக்கு யாழ்ப்பாணத்தில் 4 ஐஸ்கிறீம் பார்லர்களும் கனடாவில் ஒரு கிளையும் உள்ளது. யாழ் வணிகர் சங்கத்தின் தீவிர உறுப்பினர்களில் ஒருவர். 1971 முதல் தனது தொழிலை வெற்றிகரமாக நடாத்தி வருகின்றார்.

### திரு. அ. செ. டிலான்

திரு டிலான் NCI இன் இயக்குநர் குழுவில் ஒருவர் மற்றும் டி வில்லா விருந்தினர் மாளிகை கார்டன்ஹவுஸ் மற்றும் பீச்ஹவுஸ் ஆகியவற்றின் நிர்வாக இயக்குநராக உள்ளார். இவங்கை சுற்றுலா சபை ஹோட்டடல் பாடசாலயின் விரிவுரையாளராக 20 வருடங்களுக்கும் மேலாக சேவையாற்றினார். இவர் வட மாகாண சுற்றுலா சங்கத்தின் உதவி உறுப்பினராவார். இவர் திட்ட முகாமைத்துவத்தில் MBA பட்டமும் பெற்றுள்ளார்.

### தலைமை நிர்வாக அதிகாரி

திரு பிரேமானந்தன் மாசி மாதம் 2023 இல் வடக்கிற்கான கைத்தொழில் துறைகள் மன்றத்தில் தலைமை நிர்வாக அதிகாரி ஆக பொறுப்பேற்றார். இவர் அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் பிற வர்த்தக சங்கங்களில் பல பதவிகளை வகித்துள்ளார். அவர் கணக்கியல் மற்றும் நிதி முகாமைத்துவத்தில் இளங்கலைப் பட்டம் மற்றும் Development Studies இல் முதுகலை டிப்ளோமா பட்டமும் பெற்றுள்ளார்.

# நமது அடையாளத்தை கட்டமைக்கும் தொகுதிகள்

### ஒரு வரலாற்று பார்வை

2022 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வடக்கு கைத்தொழில் துறைகள் மன்றத்தை நிறுவியதன் மூலம் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய வட பிராந்தியத்தில் உள்ள சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில் துறையைச் சேர்ந்த அனுபவம் வாய்ந்த பிரதிநிதிகள் ஒன்றிணைந்துள்ளனர். வடமாகாணத்தில் யாழ்ப்பாணம் தவிர்ந்த அனைத்து மாவட்டங்களிலும் வணிகர் சங்கங்களைத் தவிர (வர்த்த சங்கம்) தொழிற்சங்கங்கள் இல்லாத இடங்களில் ஒரு விரிவான தீர்மானம் தேவை. இப்பகுதியில் சமூக- பொருளாதார மேம்பாட்டிற்கான மூலக் கல்லாகச் செயல்படும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் நிறுவனங்களின் வளர்ந்து வரும் தேவைகளை நிவர்த்தி செய்ய இது மிகவும் அவசியமானது.

வடக்கு கைத்தொழில் துறைகள் மன்றத்தின் தொடக்க விழா அக்டோபர் 2022 இல் நடந்தது, இதன் போது இயக்குநர்கள் குழு (நிறுவனர் இயக்குநர்கள்) தெரிவின் போது மாவட்ட வாரியான பிரதிநிதித்துவத்தின் மீது குறிப்பிட்ட கவனம் செலுத்தப்பட்டது. இம் மன்றத்தில் துரதிருஷ்டவசமாக வவுனியா மாவட்டத்திலிருந்து பிரதிநிதித்துவம் இல்லாமல், குறிப்பிடத்தக்க ஒரு வெற்றிடமும் காணப்படுகிறது. தலைவர் மற்றும் துணைத் தலைவர் உட்பட 11 இயக்குநர்களால் இம் மன்றம் அமைக்கப்பட்டுள்ளது.

ஜேர்மன் ஆசிய - பசிபிக் வர்த்தக கூட்டமைப்புடன் (OAV) புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் (MoU) கையெழுத்திட்டதைத் தொடர்ந்து, அதன் செயல்பாடுகளின் தொடக்கத்தைக் குறிக்கும் வகையில், NCI அதிகாரப்பூர்வமாக ஜனவரி மாதம் தனது செயல்பாட்டைத் தொடங்கியது.

### எங்கள் இயக்குநர்கள் குழு

எங்கள் மதிப்பிற்குரிய குழுவில் இலங்கையில் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பதற்காக அர்ப்பணிப்புள்ள தொழில் வல்லுநர்கள் மற்றும் நிபுணர்கள் உள்ளனர். மன்னார், கிளிநொச்சி முல்லைத்தீவைச் சேர்ந்த பணிப்பாளர்கள் அந்தந்த மாவட்டங்களில் NCI பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர், மீதமுள்ள பணிப்பாளர்கள் யாழ்ப்பாண மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்றனர். மாதத்தின் ஒவ்வொரு முதல் புதன்கிழமையிலும் NCI அதன் இயக்குநர்கள் குழு கூட்டத்தை நடத்துகின்றது.

### உறுப்பினர் வளர்ச்சியும் ஈடுபாடும்

NCI இல் எங்கள் அடித்தளத்தை உருவாக்கும் துடிப்பான உறுப்பினர்களின் சமூகம் இல்லாமல் எங்கள் கதை முழுமையடையாது,

NCI ஆரம்பத்தில் 25 உறுப்பினர்களுடன் தனது பயணத்தைத் தொடங்கியது, படிப்படியாக ஆண்டு இறுதியில் 100 உறுப்பினர்களாக உயர்ந்தது. எங்கள் உறுப்பினர்கள் மாகாணத்தின் நான்கு மாவட்டங்களிலிருந்தும் இணைக்கப்பட்டுள்ளனர், மேலும் வவுனியா மாவட்டத்திற்கு உறுப்பினர் சேர்க்கையை விரிவுப்படுத்த தொடர்ந்து முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த துடிப்பான சமூகம் பல்வேறு தொழில்கள், துறைகள் மற்றும் பின்புலங்களைக் குறிக்கும் ஒரு பன்முகத் திரையாகும்.

NCI வருமானத்தின் முதன்மை ஆதாரம் உறுப்பினர் கட்டணங்களிலிருந்து வருகிறது, அவை இரண்டு வகைகளாக பிரிக்கப்பட்டுள்ளன: வாழ்நாள் உறுப்பினர் மற்றும் வருடாந்த உறுப்பினர். NCI, ஜேர்மனியின் OAV நிபுணர்களின் வழிகாட்டுதலுடன் பிப்ரவரி மாதத்தில், பல்வேறு விபரங்களை உள்ளடக்கிய விரிவான உறுப்பினர் தரவுத்தளத்தை உருவாக்கியது.

தகவல்தொடர்பு மற்றும் ஒத்துழைப்பை வளர்ப்பதற்காக, அதன் உறுப்பினர்களிடையே வணிகம் தொடர்பான தகவல்கள் மற்றும் செய்திகளைப் பகிர்வதற்கான தளத்தை வழங்குவதற்காக மார்ச் மாதத்தில் அதன் அதிகாரப்பூர்வ Whats App குழுவை நிறுவியது. நிறுவனம் செப்டம்பரில் தனது YouTube சேனலையும் அதைத் தொடர்ந்து அக்டோபரில் தனது இணையதளம் மற்றும் அதிகாரப்பூர்வ ஃபேஸ்புக் (Face Book) பக்கத்தையும் தொடங்கி தனது டிஜிட்டல்இருப்பை விரிவுபடுத்தியுள்ளது.

**எமது நோக்கம்**


செழிப்பான தொழில்களை வளர்ப்பதற்கும், முதலீடுகளை ஈர்ப்பதற்கும், பிராந்தியத்தில் வேலை வாய்ப்புகளை உருவாக்குவதற்கும் ஒரு சுற்றுச்சூழல் அமைப்பை உருவாக்குதல்.

**பணி**


இலங்கையின் வடக்குப் பிராந்தியத்தில் நிலையான வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்தை மேம்படுத்துவதற்கும், அதற்காக குரல் கொடுத்து ஊக்குவிப்பதற்கும் அதிகாரமளித்தல்.

## உறுப்பினர் விபரங்கள்

### உறுப்பினர் சேர்க்கையின் போக்கு




### உறுப்பினர் வகை



# NCI சேவைகளின் விரிவான கண்ணோட்டம்

### இணைப்புகள் மற்றும் வலையமைப்பு

நீங்கள் எந்த துறையில் இருந்தாலும் பரவாயில்லை. உங்கள் பார்வையாளர்களை அதிகரிப்பது என்பது உங்கள் வணிகத்தை வளர்ப்பதாகும். உறுப்பினர் தொகுதிகள், நிறுவனங்கள், தேசிய, பிராந்திய, மாவட்ட மற்றும் பிரதேச அதிகாரிகள், இராஜதந்திரிகள் போன்றோருடன் தொடர்பு கொண்டு இணைந்து செயல்படுவதற்காக உருவாக்கப்படும். இது உங்கள் வணிகங்களை விரிவுபடுத்துவதற்கும், ஒரு தளம் பிரச்சனைகளை பகிர்ந்து கொள்வதற்கும், எதிர்கால தீர்வுகளைக் கண்டறிவதற்கும் சாதகமான கற்றல் சூழலை உருவாக்கும்.

- வலையமைப்பு நிகழ்வுகள்
- வணிக பொருத்தங்கள்
- இணையவழித் தொடர்புக் குழுக்கள்
- உள்நாட்டு வணிக நிறுவனங்களை பார்வையிடல்

### பட்டறைகள் மற்றும் பயிற்சி நிகழ்ச்சிகள்

NCI இன் பட்டறைகள், கருத்தரங்குகள் மற்றும் பயிற்சி திட்டங்கள் அனைத்து அளவிலான வணிகங்களுக்கும் அவர்களின் திறன்கள் மற்றும் அறிவை மேம்படுத்த உதவும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன. இத்திட்டங்களில் கலந்துகொள்வதன் மூலம், வணிக புதிய தொழில்நுட்பங்களைக் கற்றுக்கொள்ளவும், சமீபத்திய போக்குகளுடன் இணைந்திருக்கவும், வெற்றிபெற தேவையான ஆதரவைப் பெறவும் முடியும்.

- தொழில் சார்ந்த பட்டறைகள்
- உணவு பதப்படுத்துதல் மற்றும் பொதியிடல்
- உணவுகளை எண்ணெயில் பொரித்தல்

### முக்கிய வணிக தகவல் சேவைகள்

தொழில்துறை தகவல்களை, குறிப்பாக விதிமுறைகள், கட்டணங்கள், வர்த்தக வாய்ப்புகள் மற்றும் உள்ளூர் மற்றும் சர்வதேச சந்தைகளை பாதிக்கும் பிற விஷயங்களை சேகரிப்பதற்கும், விநியோகிப்பதற்கும், பரப்புவதற்கும் பிராந்தியத்தில் முக்கிய அமைப்புகளில் ஒன்றாக NCI இருக்கும். சேம்பர் செய்திமடல் மூலம் சமீபத்திய செயல்பாடுகள் மற்றும் திட்டங்கள் குறித்த புதிய தகவல்கைளயும் வழங்குகின்றது.

- தொழில் செய்திமடல்
- தகவல் பரிமாற்றத்திற்கான வலையமைப்பு
- இலக்கமுறை சந்தைப்படுத்தல் (Bar Code)

### வணிக உதவிச் சேவைகள்

வணிகங்களுக்கான பட்டைக்குறியீடுகளைப் பெறுவதற்கு வசதி செய்தல். பட்டைக்குறியீடு நவீன வணிகங்களுக்கு இன்றியமையாததாகும். அவை கையிருப்பு நிர்வாகத்தை நெறிப்படுத்துகின்றன, தயாரிப்புக்களை கண்டறியும் திறனை மேம்படுத்துகின்றன மற்றும் ஒட்டு மொத்த செயல்திறனை மேம்படுத்துகின்றன. NCI இல், வணிகங்கள் பார்கோடுகளைப் பெறுவதை எளிதாக்குகிறோம், உங்கள் தயாரிப்புகள் எளிதில் அடையாளம் காணக்கூடியதாகவும் சந்தையில் கண்டறியக் கூடியதாகவும் இருப்பதை உறுதி செய்கிறோம்.

### களப்பயணங்கள் மற்றும் ஆய்வுச் சுற்றுலா

களப்பயிற்சிகள் என்பவை தனிநபர்கள் அல்லது நிறுவனங்கள் புதிய சூழல்கள், தொழில்கள் அல்லது சந்தைகளை ஆழ்ந்து ஆராய்வதற்கான அனுபவங்களாகும். NCI இலும் எங்கள் களப்பயணங்கள் நேரடி அறிவிப்புகள் மற்றும் நடைமுறை அறிவை வழங்குவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளன.

- தொழில்துறை துறைசார்ந்த களப்பயணங்கள்
- பிணைய நிகழ்வுகள்
- சர்வதேச விஜயங்கள்

### பிரகடனம் மற்றும் பிரதிநிதித்துவம்

தேசிய, பிராந்திய மற்றும் மாவட்ட அளவுகளில் அமைச்சர்கள், மூத்த அதிகாரிகள் மற்றும் ஆலோசகர்களிடமிருந்து முக்கிய கொள்கை பிரச்சினைகள் குறித்து விளக்கம் கேட்பது மற்றும் உறுப்பினர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பது. எங்கள் பிரச்சாரங்கள், துடிப்பான அங்கத்தவர்கள் மற்றும் பிரதிநிதித்துவம் மூலம் முக்கிய பிரச்சினைகள் குறித்து உங்கள் கருத்தைத் தெரிவியுங்கள்.

- கூட்டுத்தொழில் அமைப்பு
- பிரகடனப் பயிற்சி
- பிரச்சினை குறிப்புகள்
- வழிமுறை நிலை கணக்கெடுப்புகள் மற்றும் தரவு சேகரிப்பு

# புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மற்றும் உடன்படிக்கைகள்

### ஜேர்மன் ஆசிய-பசிபிக் வணிக கூட்டமைப்புடனான (OAV German Asia-Pacific Business Association) செயல்படுத்தல் ஒப்பந்தம்

NCI ஜனவரி *2023* இல் ஜேர்மன் ஆசிய - பசிபிக் வணிக கூட்டமைப்புடன் (OAV) ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. இந்த நிறைவேற்று ஒப்பந்தம் இலங்கையின் வடக்கு மாகாணத்தில் ஜனவரி முதல் அக்டோபர் வரை ஒரு திட்டத்தை செயல்படுத்துவதை நோக்க மாகக் கொண்டுள்ளது. இந்த திட்டத்தின் நோக்கம் ஜேர்மன் தனியார் துறையின் ஈடுபாட்டை வடக்கு மாகாண சிறிய நடுத்தர தொழில் முயற்சியாளர்களிடைய அதிகரிப்பதாகும்.



### தொழில்துறை சேவைகள் பணியகத்துடன் (ISB) புரிந்துணர்வு ஒப்பந்தம்

*2023* ஜூலை மாதத்தில் தொழில் சேவை பணியகம் (ISB) உடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU) கையெழுத்தானது. இவ் ஒப்பந்தப் பத்திரத்தின் நோக்கம், வட மாகாணத்தில் ஆலோசனை, மற்றும் திட்டங்களில் ஈடுபடுவதற்காக ISB மற்றும் NCI இடையே ஒரு மூலோபாய கூட்டணி உருவாக்குவதாகும். இதன் மூலம், இரு தரப்பினரும் நிதி மற்றும் பிற நன்மைகளைப் பெறுவர்.



### பன்னாட்டு தூதர்களுடனான உரையாடல்கள்: உலகளாவிய கூட்டாண்மை உருவாக்கம்

### பிரிட்டிஷ் உயர் அதிகாரிகளுடனான தொடர்புக்கான சந்திப்பு

*2023* மே மாதத்தில், HSBC யாழ்ப்பாண கிளையின் ஒத்துழைப்புடன் பிரித்தானிய உயர் ஆணைக்குழுவுடன் ஒரு இணைப்பு கூட்டம் இடம்பெற்றது. பிரித்தானிய உயர் ஆணையர், HSBC இன் தலைமை நிர்வாக அதிகாரி, HSBC அதிகாரிகள், NCI தலைவர், இயக்குநர் குழு மற்றும் உறுப்பினர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டனர். வட மாகாணத்தில் ஐரோப்பிய நாடுகளுக்கு பொருட்களை ஏற்றுமதி செய்யும் இந்த வாய்ப்புகளை வலியுறுத்துவதே கூட்டத்தின் நோக்கமாகும்.



### கனடா நாட்டின் ஆலோசகருடன் கலந்துரையாடல் (அரசியல் & வர்த்தகம்)



கனடாவின் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின், அரசியல் மற்றும் வர்த்தக ஆலோசகர் திரு. டேனியல் புட் மற்றும் மூத்த வர்த்தக அதி காரி திரு. அப்துல் மஜீத் கையூம் ஆகியோர்


ஜூலை *17, 2023* அன்று NCI அலுவலகத்திற்கு விஜயம் மேற்கொண்டனர். வடக்கு மாகாணத் தின் நிலமை, சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களின் தேவைகள், கனடாவுக்கு ஏற்றுமதி செய்வதற்கான நடைமுறைகள், வர்த்தகத்தை எளிதாக்குதல், கனடாவில் உள்ள தமிழ் புலம்பெயர்ந்தோருடன் இணைந்து செயல்படுதல், இயந்திரங்களை இறக்குமதி செய்தல் ஆகியவை இதில் கலந்துரையாடப் பட்டன. NCI தலைவர், துணைத் தலைவர், இயக்குநர்கள் மற்றும் தலைமைச் செயல் அதிகாரி (CEO) ஆகியோர் கலந்துரையாடலில் பங்கேற்றனர்.

**சீன உயர்ஸ்தானிகருடனான சந்திப்பு**

*2023* நவம்பர் *6* ஆம் தேதி யாழ்ப்பாணத்தில் ஜெட்விங் ஹோட்டலில் இலங்கைக்கான சீனத் தூதருடன் நடைபெற்ற சந்திப்பில் NCI ஐ பிரதிநிதிதுவப்படுத்தி எமது தலைவர் கலந்து கொண்டார். தூதுவர் வடமாகாணத்தின் தற்போதைய நிலைமை பற்றிய தகவல்களைக் கேட்டறிந்ததோடு NCI மற்றும் அதன் உறுப்பினர்களின் செயற்பாடுகள் குறித்தும் கேட்டறிந்தார். இச்சந்திப்பின் போது, வடக்கு மாகாணத்தில் உள்ள SME க்கள் எதிர்நோக்கும் சவால்கள், சீனாவிற்கு பொருட்களை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்தல் மற்றும் இயந்திரங் களுக்கான தேவைகள் உள்ளிட்ட பிரச்சினைகள் குறித்து தலைவர் எடுத்துரைத்தார்.



# NCI செயல்பாடுகளின் கண்ணோட்டம்



## தென்னை அபிவிருத்தி சபையுடன் கலந்துரையாடல்

*2023 ஜனவரி 24* அன்று யாழ்ப்பாணம் வடக்கு மாகாண தேசிய தென்னை அபிவிருத்தி அதிகாரசபை (CDA) அதிகாரிகளுடன் NCI அலுவலகத்தில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது. NCI தனது தென்னை சாகுபடி மற்றும் தென்னை சார்ந்த பொருட்கள் தயாரிப்பில் ஈடுபட்டுள்ள உறுப்பினர்களுக்காக ஏற்பாடு செய்த முதல் நிகழ்வாகும்.

இந்நிகழ்வை முல்லைத்தீவு மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் எமது பணிப்பாளர் திரு.பிரதீபன் அவர்களால் ஆரம்பித்து வைக்கப் பட்டது. தலைவர், NCI இயக்குநர்கள், CDA இயக்குநர் மற்றும் உதவி இயக்குநர் மற்றும் NCI உறுப்பினர்கள் இந்த கலந்துரையாடலில் பங்கேற்றனர்.

கூட்டத்தில் கீழ்க்கண்ட விடயங்கள் கலந்துரையாடப்பட்டன

1. வட மாகாணத்தில் தென்னை சாகுபடி செய்தலையும், தென்னை சார்ந்த உற்பத்தி பொருட்களை மேம்படுத்துவதும் எப்படி?
2. நிதி நிறுவனங்களுடன் இணைந்து குறைந்த வட்டி விகிதத்தில் *3.5* மில்லியன் வரை கடன்களை வழங்குதல்.
3. தேங்காய் ஓடுகள் மற்றும் தும்புகளை (நார்) சேகரிக்கும் மையத்தை அமைத்தல்.
4. வாழ்வாதார மேம்பாட்டு பயிற்சி திட்டம்.
5. இழை தயாரிக்கும் தொழிற்சாலைகளை உருவாக்குதல்
6. பாரம்பரிய முறையில் தயாரிக்கப்படும், ஆரோக்கியமான வெள்ளை தேங்காய் எண்ணெயை குறிக்கும் ஒரு அடையாளத்தை உருவாக்கி, அதை மக்களிடம் கொண்டு சேர்த்து, அதன் பயன்பாட்டை ஊக்குவித்தல்.



## இலக்குக் குழு கலந்துரையாடல்

மே *1, 2023* அன்று NCI அலுவலகத்தில் இலக்குக் குழு கலந்துரையாடல் NCI ஆல் ஏற்பாடு செய்யப்பட்டது. யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த பல்வேறு துறைகளில் இருந்தும் பிரதிநிதிகள் கலந்து கொள்ள அழைப்பு விடுக்கப்பட்டது.

யாழ் மாவட்டத்தில் கணக்கியல் மற்றும் நிதி மேலாண்மையில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் தேவைகளை அடையாளம் காண்பதே இந்த கலந்துரையாடலின் நோக்கம் என்று துணைத் தலைவர் பங்கேற்பாளர்களை வரவேற்று விளக்கினார்.



இதற்காக, தொழிலதிபர்கள் தங்கள் அன்றாட நடவடிக்கைகளில் கணக்கியல் மற்றும் கணக்கு முறைகளைப் பயன்படுத்துவது குறித்த அவர்களின் கண்ணோட்டத்தையும், அவர்கள் தங்கள் நிறுவனங்களில் சரியான கணக்கியல் மற்றும் கணக்கு வைப்பு முறையை பராமரிப்பதில் எதிர்கொள்ளும் சவால்களையும் அறிந்து கொள்வதற்காக கேள்விக் கொத்து ஒன்று உருவாக்கப்பட்டு பங்குபற்றுனர்களுக்கு வழங்கப்பட்டது. தலைமைச் செயல் அதிகாரி கேள்விக் கொத்தினை விளக்கி, பங்கேற்பாளர்கள் அதை நிறைவு செய்ய உதவினார். அதன் மூலம் பங்குபற்றுனர்களின் கணக்கியல் நிலைமைகளையும் கணக்கு வைப்பு முறைகளையும் விளங்கிக் கணக்கியல் மற்றும் கணக்கு வைப்பு முறை தொடர்பான பயிற்சிகளையும் வழங்க முடியும்.



### சமையல் எண்ணெய்களில் நிபுணத்துவத்ததை அடைந்து கொள்ளுதல்: எண்ணெயில் பொறிக்கப்படும் உணவுகளின் சரியான நுட்பங்கள் குறித்த பயிற்சிப் பட்டறை

வடக்கிற்கான கைத்தொழில் துறைகள் மன்றம் கைத்தொழில் அபிவிருத்தி சபை (IDB) மற்றும் ஏற்றுமதி அபிவிருத்தி சபை (EDB) உடன் இணைந்து மார்ச் 28 இலிருந்து 30ஆம் திகதி வரை யாழ்ப்பாணத்தில் உள்ள முகாமைத்துவ பயிற்சி நிலையத்தில் உணவுப் பொருட்களை எண்ணெயில் பொரிக்கும் முறையான நுட்பங்கள் தொடர்பான பயிற்சிப் பட்டறையை ஏற்பாடு செய்திருந்தன. மூன்று நாள் பயிலரங்கம் இரண்டு அமர்வுகளாகப் பிரிக்கப்பட்டு, எண்ணெயில் பொரிக்கும் முறை, பொரித்த உணவுகளின் எதிர்மறை அம்சங்களைக் குறைப்பது எப்படி, அறிவியல் கோட்பாடுகளின் அடிப்படையில் பொரிக்க சரியான எண்ணெயைத் தேர்ந்தெடுப்பது, பயன்படுத்திய எண்ணெயை மீண்டும் மீண்டும் பயன்படுத்துவதன் எதிர்மறை தாக்கம் மற்றும் பயன்படுத்தப்பட்ட எண்ணெயின் முறையான மறுசுழற்சி செயல்முறை போன்ற விடயங்கள் கற்றுத்தரப்பட்டன.



இறுதி நாளின் மாலை அமர்வு செயல்முறை அமர்வாக திட்டமிடப்பட்டது. டைட்டானிக் உணவகத்தின் (Titanic Restaurant) சமையல் கலைஞர் ஒருவர் பயிற்சி அமர்வை நடத்துவதற்கு அழைக்கப்பட்டார், மேலும் SPK ROCK நிதியுதவியைச் செய்தது.



NCI உப தலைவர் திரு.நகுலேஸ்வரன் இந்த செயலமர்வுக்கு வளவாளராக செயற்பட்டார். இந்த செயலமர்வில் வடமாகாணத்தில் உணவு உற்பத்தியில் ஈடுபட்டுள்ள 30 தொழில் துறையினர் ஆர்வத்துடன் கலந்துகொண்டனர். இறுதி அமர்வு நிறைவடைந்ததும், சான்றிதழ் வழங்கும் விழா நடைபெற்றது. மாகாணப் பணிப்பாளர் திரு.கெங்காதரன், IDB உதவிப் பணிப்பாளர் திரு. சசிகரன், EDB இன் உதவிப் பணிப்பாளர் திரு.கனோஜன், NCI தலைவர் திரு. பூரணச்சந்திரன், IDB & EDB பணியாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டு பங்கேற்பாளர்களுக்கு சான்றிதழ்களை வழங்கி பட்டறையை வெற்றிகரமாக முடித்து வைத்தனர்.



### பொதியிடல் இயந்திரங்களை புத்துயிர் பெறச் செய்தல்: பராமரிப்பு, பழுதுபார்ப்பு மற்றும் செயல்விளக்கப் பட்டறை / முகாம்

வடக்கிற்கான கைத்தொழில் துறைகள் மன்றம் ஏற்றுமதி அபிவிருத்தி சபை (EDB) மற்றும் கைத்தொழில் அபிவிருத்தி சபை ஆகியவை இணைந்து உணவு பொதியிடல் இயந்திரங்களை பழுது பார்த்தல், பராமரிப்பு செய்வது மற்றும் செயல்விளக்க முகாமை போன்றவற்றை மையமாகக் கொண்டு முகாமைத்துவ பயிற்சி மையத்தில் பயிற்சி ஒன்றினை ஜூலை 13 மற்றும் 14, 2023 அன்று ஏற்பாடு செய்தன.



இந்தப் பயிற்சிக்கு, உணவுப் பொதியிடல் இயந்திரங்கள் தயாரிப்பு மற்றும் விநியோகத்தில் நிபுணத்துவம் பெற்ற ஒரு தர அடையாளம் உடைய இந்தியன் சீபேக் நிறுவனத்திலிருந்து ஒரு வளவாளரும் ஒரு தொழில்நுட்ப வல்லுநரும் வந்து சிறப்பித்தனர்.



இந்த பயிற்சி, இரண்டு அமர்வுகளாக நடத்தப் பட்டது. இரண்டு நாள் பட்டறையில், முதல் நாளில் முதல் பாதி செயல்விளக்க அமர்வுக்கு ஒதுக்கப்பட்டது. வட மாகாணத்திலுள்ள இந்த உற்பத்தியாளர்கள் மற்றும் விநியோகஸ்தர்களிட மிருந்து இயந்திரங்களை கொள்வனவு செய்த 30 பங்கேற்பாளர்கள் இந் நிகழ்ச்சிக்கு அழைக்கப்பட் டனர். இந்த செயல்விளக்க அமர்வில் பங்கேற் பாளர்கள் இயந்திரங்களில் ஏற்படும் சிறிய பழுதுகளை எவ்வாறு திறம்பட கையாள்வது என்பதைக் கற்றுக்கொண்டு பயனடைந்தனர். உற்பத்தியாளர்களிடமிருந்து உதிரி பாகங்களை கொள்வனவு செய்யும் செயல்முறையை எளி தாக்க இயந்திரங்களில் உள்ள உதிரி பாகங்களின் பெயர்களைப் புரிந்து கொள்வவதற்கும் பயிற்சி வழங்கப்பட்டது.



முதல் நாளின் பிற்பகுதியும், முழு இரண்டா வது நாளும் இயந்திரங்களை பராமரிப்பதற்கும் பழுது பார்ப்பதற்குமாக ஒதுக்கப்பட்டன, இது NCI இன் அலுவல்கத்தில் ஏற்பாடு செய்யப் பட்டது.

இப் பயிற்சிக்கான தகவல்கள் NCI இன் அதிகாரப்பூர்வ WhatsApp குழு மற்றும் பங்குதாரர்கள் மூலம் அதன் உறுப்பினர்கள் மற்றும் பிறருக்கும் பகிரப்பட்டது. இந்நாட்களில் 15 இயந்திரங்களுக்கு மேல் பழுதுபார்க்கப் பட்டன. இயந்திரங்களில் பெரிய பழுது ஏற்பட்டு, யாழ்ப்பாணத்தில் உதிரி பாகங்கள் கிடைக்காத பங்கேற்பாளர்களை உதிரி பாகங் களை மாற்றுவதற்காக கொழும்புக்கு அனுப்பு மாறு அறிவுறுத்தப்பட்டனர்.

### வடமாகாணத்தின் கைத்தொழில் அபிவிருத்தி தொடர்பான தொழில்சார் கலந்துரையாடல்

வடக்கு மாகாணத்தில் வர்த்தகம் மற்றும் தொழில்துறை அபிவிருத்தி குறித்து தலைவர் தலைமையில் ஒரு கலந்துரையாடல் நிகழ்த்தப் பட்டது. இந்நிகழ்வை துணைத் தலைவர் ஏற்பாடு செய்தார். இந்நிகழ்வில் சமூக-பொரு ளாதார ஆய்வாளர் மற்றும் ஆலோசகர் திருசெல் வின் இரேனியாஸ் வளவாளராக பங்கேற்றார்.



வடக்கு பகுதியில் உள்ள சிறு மற்றும் நடுத்தர தொழில்களின் (SME) சவால்கள், முதலீட்டு வாய்ப்புகள் மற்றும் சாத்தியமான முதலீட்டா ளர்களை அடையாளம் காண்பது, காங்கேசன் துறைமுகம் (KKS) மற்றும் நாகப்பட்டினம் இடையே படகு சேவையின் சவால்கள் மற்றும் நன்மைகள் ஆகியவை விரிவாக விவாதிக் கப்பட்டன.

### நிறுவனங்கள் உலகளாவிய ஏற்றுமதி சந்தையில் வெற்றி பெற, அவற்றின் உணவுப் பொதியிடல், முத்திரையிடுதல், பட்டைக் குறி நடைமுறைப்படுத்தல் மற்றும் உணவு நிறக் குறியீடுகள் பற்றிய ஏற்றுமதி சந்தை விதிமுறைகள் கடைபிடித்தல் - பயிற்சி முகாம்

கைத்தொழில் அபிவிருத்தி சபை உடன் இணைந்து ஏற்றுமதி சந்தை, உணவுப் பொதியி டல், முத்திரையிடுதல், பட்டைக் குறி மற்றும் உணவு நிறக் குறியீட்டு பயன்பாடுகள் குறித்த ஒரு நாள் பயிற்சி நிகழ்ச்சியை 18 அக்டோபர் 2023 அன்று யாழ்ப்பாணத்தில் உள்ள முகா மைத்துவ பயிற்சி மேம்பாட்டு மையத்தில் ஏற் பாடு செய்தது.

பயிற்சியின் கருப்பொருள், பங்கேற்பாளர்களுக்கு உணவு பொருட்களை உற்பத்தி செய்வதற்கான பொருத்தமான பொதியிடல் முறை மற்றும் பொருத்தமான பொருட்கள் பற்றிய அறிவை வழங்குவதும் அவற்றின் தயாரிப்புகளின் சேமிப்பு தரத்தை (தேக்க ஆயுள்) நீடிப்பதுமாகும்.



மேலும், 2024 ஜனவரி முதல் நடைமுறைக்கு வரும் திருத்தப்பட்ட உணவு சட்டம் குறித்து, குறிப்பாக உணவு முத்திரையிடுதல் மற்றும் விளம்பரங்கள், இனிப்பு, உப்பு மற்றும் கொழுப்பு உள்ள பொருட்களுக்கான போக்குவரத்து ஒளி நிறக் குறியீட்டு முறைமை, முத்திரையிடுதல் மற்றும் பட்டைக் குறி மற்றும் அதன் நன்மைகள் ஆகியவற்றைப் பற்றி பங்கேற்பாளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதாகும்.



EDB உதவிப் பணிப்பாளர் திரு.கனோஜன் மற்றும் அவரது பணியாளர்கள் முழு அமர்விலும் கலந்து கொண்டு வளவாளர்கள் மற்றும் பங்கேற்பாளர்களுக்கு உதவினர். வடக்கு மாகாணத்தின் பல்வேறு துறைகளைச் சேர்ந்த பங்கேற்பாளர்கள் ஆர்வமுடன் கலந்துகொண்டனர். NCI தலைவர், துணைத் தலைவர், EDB உதவி இயக்குநர், IDB மாகாண் இயக்குநர் மற்றும் உதவி இயக்குநர்கள் ஆகியோரால் பங்கேற்பாளர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. NCI துணைத் தலைவர் உணவுப் பொதியிடல், முத்திரையிடுதல் மற்றும் பட்டைக் குறி ஆகியவற்றிற்கான வளவாளராகப் பங்கேற்றார் மற்றும் பனை அபிவிருத்தி சபையின் பிரதிநிதிகள் போக்குவரத்து விளக்குகளின் வண்ணக் குறியீட்டு முறைமை மற்றும் அதன் பயன்பாடு பற்றி விளக்கினர். நிகழ்ச்சி நிறைவடைந்த பின்னர், NCI யின் நிறைவேற்று உத்தியோகத்தர் (CEO) பங்கேற்று, பட்டைக் குறிகளை பதிவு செய்தல், அச்சிடுதல், கட்டண முறைகள் மற்றும் புதுப்பித்தல் ஆகியவற்றில் ஏற்படும் நடைமுறை சிக்கல்களை விளக்கினார். மேலும், பங்கேற்பாளர்கள் பட்டைக் குறி முறைமை பற்றி எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளித்தார்.



# திட்ட செயல்பாடுகள் பற்றிய ஒரு பார்வை



# திட்ட செயல்பாடுகள் பற்றிய ஒரு பார்வை

**வணிக உறுப்பினர் அமைப்பு (BMO) திட்டம்**

ஜேர்மன் அபிவிருத்தி கூட்டுத்தாபனத்தின் பரீட்சித்துப் பார்த்து நிரூபிக்கப்பட்ட ஒரு கருவியாக வணிக உறுப்பினர் அமைப்புக் கூட்டாண்மை (BMO Partnership) உள்ளது. ஜேர்மன் ஆசிய-பசிபிக் வணிகக் கூட்டமைப்பு (OAV) மற்றும் வடக்கு கைத்தொழில் துறைகள் மன்றம் மற்றும் மகளிர் தொழிற்துறை மற்றும் வர்த்தக சம்மேளனம் (WCIC) ஆகியவை 2023 ஜனவரியில் ஜேர்மன் தனியார் துறையின் ஈடுபாட்டை வடக்கு மாகாண சிறிய நடுத்தர தொழிலால் முயற்சியாளர்களிடைய அதிகரிக்கும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்ட தங்கள் வணிக உறுப்பினர் அமைப்புக் கூட்டாண்மை திட்டங் களைத் தொடங்கின.

இந்த திட்டத்தின் முதன்மை நிதியளிப்பாளர் ஜேர்மன் கூட்டாட்சி அரசின் பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டுக்கான அமைச்சு (BMZ).

முதன்மை நிதி பெறுநர் sequa gGmbh ஆகும், இந் நிறுவனத்தின் செயல்பாடாக நிதியை OAV இற்கு வழங்குவதோடு திட்ட மதிப்பீடு மற்றும் கண்காணிப்பையும் மேற்கொள்வதாகும். திட்ட செயலாக்கக் குழுவின் கீழ் திட்டத்தை செயல் படுத்துபவர் OAV. உள்ளூர் திட்ட பங்காளர் நிறுவனங்களாக NCI WCIC காணப்பட்டன. இலங்கையில் ஜேர்மன் கைத்தொழில் மற்றும் வர்த்தகத்தின் பிரதிநிதிகள் குழுவான AKH ஆனது கூட்டுறவு பங்குதாரராக இருந்தது.

**திட்டப்பணியின் நோக்கங்கள் மற்றும் விளைவுகள்**

**முழுமையான நோக்கம்:**

இலங்கையின் வட மாகாணத்தில் சிறு மற்றும் நடுத்தர அளவிலான தொழில் நிறுவனங் களுக்கான வர்த்தகச் சூழலை மேம்படுத்துவது.

**திட்டப்பணியின் நோக்கம்**

NCI மற்றும் WCIC தமது உறுப்பினர்களின் வணிக தேவைகளை திறம்படவும் நிலையான படியும் பூர்த்தி செய்வதற்கும், அவர்களின் நலன் களை ஆதரிப்பதற்கும், வணிக வலையமைப்பாக்க வாய்ப்புகளை வழங்குவதற்கும் இணைந்து செயல்படுகின்றன. திட்டப்பணியின் காலம் ஜனவரி முதல் அக்டோபர் வரை 10 மாதங்கள்.

***விளைவு 1:*** NCI மற்றும் WCIC பல வருவாய் வழிகளைக் கொண்ட தொழில் ரீதியாக நிர்வகிக்கப்படும் மன்றங்களாகும்.

***விளைவு 2:*** தேவை அடிப்படையிலான சேவைகளை NCi மற்றும் WCIC தங்கள் உறுப்பினர்கள் மற்றும் பிற பங்குதாரர்களுக்கு வழங்குகின்றன.

***திட்டத்தின் பயனாளிகள்:*** NCI மற்றும் WCIC மாகாண மற்றும் தேசிய அரசாங்கத்துடனான கொள்கை உரையாடல்களில் தனியார்பங்கு தாரர்களுக்கான முக்கிய திறவு கோலாக செயல் படுகின்றன.

**வாய்ப்புகளை ஆராய்தல்:**
**உறுப்பினர் நிறுவனத்தின்**
**முல்லத்தீவு மாவட்ட விஜயம்**

NCI இயக்குநர்கள் குழுவினர், தலைமை நிர்வாக அதிகாரி மற்றும் BMO திட்டத்தின் நீண்டகால நிபுணர் மிரியம் ஹெட்ஜர் ஆகியோர் பல்வேறு நோக்கங்களுக்காக முல்லைத்தீவு மாவட்டத்திற்கு ஒரு நாள் விஜயமொன்றினை 2024 மார்ச் 28 ஆம் திகதி மேற்கொண்டனர். எங்கள் உறுப்பினர்களைச் சந்திப்பதும் அவர் களின் தொழில்களை அவதானிப்பதும் இந்த விஜயத்தின் பிரதான நோக்கமாகும். இந்த விஜயம் எங்கள் உறுப்பினர்களை ஊக்குவிப் பதற்காகவும், முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள சிறிய மற்றும் நடுத்தர தொழில் (SME) நிறுவனங்கள் எதிர்கொள்ளும் சவால்களைப் புரிந்து கொள்வதற்காகவும், அவற்றின் தொழில் களின் மேம்பாட்டிற்கு ஆலோசனைகளை வழங்குவதற்காகவும் திட்டமிடப்பட்டது.

## மாவட்ட செயலாளருடன் கலந்துரையாடல்

இந்த விஜயத்தின் போது முல்லைத்தீவு மாவட்ட செயலாளருடன் கலந்துரையாடல் ஒன்று மாவட்ட செயலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. முல்லைத்தீவு மாவட்ட செயலாளரும், உதவி மாவட்ட செயலாளரும், ஊழியர்களும் கலந்துரையாடலில் ஆர்வமுடன் பங்கேற்றனர். இந்த கூட்டத்தின் போது NCI

மற்றும் அதன் சேவைகள் பற்றிய தகவல்கள் பகிரப்பட்டன. மேலும், முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள சிறிய மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் (SMES) எதிர்கொள்ளும் சவால்களைப் பற்றிய தகவல்கள் சேகரிக்கப் பட்டன. முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள எங்கள் உறுப்பினர்களுக்கு சிறப்பாக சேவை செய்ய இந்த சவால்களைப் புரிந்துகொள்வதில் கவனம் செலுத்தப்பட்டது.



Nature Wins (Pvt) Ltd, SPK Rock (Pvt) Ltd, Golden Queen Farm மற்றும் RL Industries ஆகிய நான்கு அங்கத்துவ தொழில் நிறுவனங்களுக்கு விஜயம் மேற்கொள்ளப்பட்டது. உறுப்பினர் நிறுவனங்களின் உரிமையாளர்கள் மற்றும் மாவட்டத்தில் உள்ள பிற பங்குதாரர்களுடன் NCI இயக்குநர்கள் கலந்துரையாடல் நடத்திய தால், இது மிகவும் பயனுள்ள பயணமாக அமைந்தது.



**தொழில் இயக்கவியலை அறிதல்: தொழில்துறை செயல்பாடுகள் மற்றும் செயல்முறைகள் வயம்ப குருநாகல் மாவட்ட தொழிற்பேட்டைக்கான களப்பயணம்**

களப்பயணம் கற்பித்தலின் தந்திரோபாய முறைகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது. இதற்குப் பின்னால் உள்ள முக்கிய காரணம், பங்கேற்பாளர் கள் வேலை முறைகள் மற்றும் வேலைவாய்ப்பு நடைமுறைகள் என்பவற்றை நேரடியாக நடை முறை மூலம் விஷயங்களைத் தெரிந்துகொள்ள உதவுகிறது.

வடக்கிற்கான கைத்தொழில் துறைகள் மன்றம் (NCI) BMO கூட்டாண்மை திட்டம் மற்றும் தொழில் சேவை பணியகம் (ISB) ஆகியவற்றுடன் இணைந்து 2023 ஜூன் 5 மற்றும் 6 ஆம் தேதிகளில் இலங்கையின் வட மத்திய மாகா ணத்தில் குருநாகல் மாவட்டத்திலுள்ள வயம்ப வுக்கு ஒரு கள ஆய்வு பயணத்தை ஏற்பாடு செய் தது. இதில் NCI இன் நிர்வாக சபை உறுப்பினர்கள் மற்றும் அங்கத்தவர்கள் கலந்து கொண்டனர்.

உணவு பதப்படுத்துதல், உணவு நீர் நீக்கம், பொதியிடல் மற்றும் எண்ணெய் ஆலை ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள உறுப்பினர்களின் கோரிக்கையின்படி இந்த விஜயம் ஏற்பாடு செய்யப்பட்டது. ISB ஆனது NCI க்கு வயம்பு தொழிற்பகுதியில் உள்ள தொழிற்சாலைகளை கண்டறிய உதவி செய்தது மட்டுமல்லாமல் தொழிற்சாலைகளுக்கு பார்வையிடவும் ஏற்பாடு செய்தது. NCI குருநாகலில் அமைந்துள்ள ISB அலுவலகத்திற்கு சென்று, அந்த நிறுவனத்தின் செயல் இயக்குநர் திரு. நீலகாந்த் வன்னிநாயக்க மற்றும் மூத்த ஆலோசகர் திரு. ரோஹன் ஆகியோரை சந்திக்கும் வாய்ப்பைப் பெற்றது. செயல் தலைவர் ISB சேவைகள் மற்றும் அவற் றின் வளர்ச்சியைப் பற்றி சுருக்கமாக விளக்கினார்.





பங்கேற்பாளர்களின் சுற்றுப்பயண அனுபவம் குறித்த கருத்துக்கள் நேர்மறையாக இருந்தன. NCI இயக்குநர்கள் மற்றும் உறுப்பினர்கள் உட்பட இருபத்தெட்டு பங்கேற்பாளர்கள், பயணத்தின் ஏற்பாடு குறித்து தங்கள் திருப்தியை வெளிப்படுத்தினர். நிர்ணயிக்கப்பட்ட பயணத் திட்டத்தின்படி அனைத்து தொழிற்சாலை களையும் பார்வையிட முடிந்ததால் அவர்கள் மகிழ்ச்சியடைந்தனர். பங்கேற்பாளர்கள், NCI இயக்குநர் குழு, ISB அதிகாரிகள் மற்றும் பார்வையிடப்பட்ட நிறுவனங்களுக்கிடையே நடைபெற்ற தொடர்பு ஏற்படுத்தும் சந்தர்ப்பங் கள் மிகவும் திருப்திகரமாக இருந்தன.



இந்த இரண்டு நாள் பயணத்தின் போது பின் வரும் தொழிற்சாலைகள் பார்வையிடப்பட்டன;

1. நேவிகட்டா Foods (பிரைவேட்) லிமிடெட்
2. வயம்பா பிரிண்ட் பேக் (பிரைவேட்) லிமிடெட்
3. ட்ரோபிகல் ஹெல்த் ஃபுட் (பிரைவேட்) லிமிடெட்
4. தகநாயக்கா ஒயில் மில்

### திட்ட மதிப்பீடு மற்றும் பங்குதாரர் ஈடுபாடு: SEQUA வின் வடக்கு மாகாண விஜயம்

2023 ஜூன் 26 முதல் 30 வரையிலான நாட்களில், OAV பிரதிநிதிகள் குழுவினர் மற்றும் BMO திட்டத்தின் முதன்மை நிதி பெறுநரும் SEQUA நிறுவனத்தின் சுயாதீன மதிப்பீட்டா ளரும் NCI அலுவலகத்திற்கு விஜயம் செய்தனர். இந்த குழுவில் மிரியம் (நீண்ட கால் நிபுணர்), கிமோரா க்ளக் (தெற்கு ஆசிய பிராந்திய முகா மையாளர்), டாக்டர் ரோலண்ட் ஸ்ட்ரோஹ் மேயர் (OAV இன் BMO திட்ட ஒருங்கிணைப் பாளர்), மற்றும் SEQUA இன் மதிப்பீட்டு ஆலோசகர் பேராசிரியர் ஜோர்க் லாஹ்னர் ஆகியோர் இடம்பெற்றனர். NCI தலைவர், துணைத் தலைவர் மற்றும் இயக்குநர்கள் இக் குழுவிற்கு அன்பான வரவேற்பு அளித்தனர்.



திட்டத்தை மதிப்பீடு செய்தல், உறுப்பினர் தொழிற்சாலைகளைப் பார்வையிடுதல், திட்ட மற்றும் நடவடிக்கைகள் வடக்கு மாகாணத் தில் NCI இன் சேவைகள் குறித்து உறுப்பினர் கள் மற்றும் பங்குதாரர்களுடன் கலந்துரை யாடுதல் என்பன இந்த விஜயத்தின் நோக்கங்கள் ஆகும்.

குழுவினரின் முதல் விஜயம் NCI அலுவலகத் திற்குச் சென்று அனைத்து இயக்குநர்களையும் ஊழியர்களையும் சந்தித்தது. NCI யின் துணைத் தலைவர் NCIயின் செயல்பாடுகள் பற்றி மேலோட்டமாக விளக்கினார். மதிப்பீட்டாள ரால் சுயாதீனமான திட்ட மதிப்பீடு நடத் தப்பட்டது.

### SEQUA வின் கள விஜயம்

இரண்டு நாள் களப்பயணத்தின் போது, குழுவினர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ மற்றும் வர்த்தக பீடத்தின் பீடாதிபதி, சந்தைப்படுத்தல் துறை தலைவர் மற்றும் சிரேஷ்ட விரிவுரையாளர்களுடன் பல்கலைக்கழகம் மற்றும் NCI இற்கும் இடையே சாத்திய ஒத்துழைப்புக்களை ஆராய்வதற்கும் இரு நிறுவனங்களையும் உள்ளடக்கிய எதிர்கால திட்டங்களை விவாதிப்பதற்குமான கலந்துரை யாடலை நடத்தினர்.

யாழ்ப்பாணம் கச்சேரியில் கைத்தொழில் அபிவிருத்தி சபையுடன் (IDB) ஒரு சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டது. இக்கூட்டத்தில், குழுவினர் இயக்குநருடன் இணைந்து, IDB மற்றும் NCI இடையே இணைச் செயல்பாடுகள் குறித்தும், NCI வழங்கும் சேவைகள் குறித்தும் கலந்துரையாடினர்.




**உறுப்பினர் நிறுவனங்களிற்கு விஜயம்**



*யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள உறுப்பினர் நிறுவனங்கள் இந்த விஜயத்திற்காக தேர்ந்தெடுக் கப்பட்டன.*

*கீழ்காணும் நிறுவனங்கள் பார்வையிடப் பட்டன:*

1. *லிங்கன் ஐஸ் கிரீம்*
2. *லக்கி மல்டி புரொடக்ஸ்*
3. *டைட்டானிக் ரெஸ்டாரண்ட்*
4. *சுபாஷ் பேக்கரி*
5. *ராயல் புரொடக்ஸ்*






**மன்னார் மாவட்ட உறுப்பினர் நிறுவனங்களிற்கு விஜயம்**

*BMO திட்டத்தின் ஒரு பகுதியாக, 2023 மே 1 ஆம் தேதி ஏழு இயக்குநர்களின் குழு விஜயம் ஏற்பாடு செய்யப்பட்டது. NCI இன் நிறுவனர் இயக்குநர்களில் ஒருவரும் அடம்பன் ஆர்கானிக் பண்ணையின் உரிமையாளருமான திரு. உருத்திரமூர்த்தி இந்த விஜயத்தை ஏற்பாடு செய்தார்.*

*மன்னாரில் உள்ள கீழ்க்காணும் நிறுவனங் களை குழுவினர் பார்வையிட்டனர்:*

1. *அடம்பன் ஆர்கானிக் பண்ணை*
2. *உமா புரொடக்ஸ்*
3. *கோகுலம் பனை பொருட்கள்*
4. *கேசாயினி இனிப்புகள்*
5. *சைபர் சிட்டி பிரிண்டர்ஸ்*



*குழுவினர் ஒவ்வொரு சிறிய நடுத்தர தொழில் முயற்சியாளர்களையும் நேர்காணல் செய்து, தேவைகள், சவால்கள், வசதிகள் மற்றும் NCI யிடம் எதிர்பார்க்கப்படும் ஆதரவு ஆகியவற்றைப் பற்றி அறிந்துகொண்டனர். அடம்பன் பிரதேச செயலாளருடனான சந்திப்பு ஒன்று நாள் இறுதி*

யில் அடம்பன் பிரதேச செயலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அடம்பன் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள சிறு, மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் (SME) சவால்கள் மற்றும் சபையின் சேவைகள் பற்றி விவாதிப்பதற்காக குழு, பிரதேச செயலாளர், உதவிப் பிரதேச செயலாளர், திட்டமிடல் அதிகாரி மற்றும் பிற தொழில் சார்ந்த ஊழியர்களை சந்தித்தது.



**கைத்தொழில் கண்காட்சியில் NCI இன் சாதனை - யாழ்ப்பாணம் 2023**

**B2B2C பிணைப்பு உருவாக்கத்தின் மூலம் வணிக மேம்பாட்டை ஊக்குவிதல்**

B2B2C இணைப்பு வலையின் இறுதி இலக்கு, பிராந்திய SMES, வணிக மற்றும் தொழில் துறை அமைப்புகள் ஆகியவை ஒத்த சிந்தனை கொண்ட நிபுணர்களுடன் இணைந்து செயல்படவும், தொழில் துறை நிபுணர்களிடமிருந்து கற்றுக் கொள்ளவும், தங்கள் இலக்கு பார்வையாளர்களுடன் ஈடுபடவும், தொடர்பு கொள்ளவும், தங்கள் துறையில் சமீபத்திய போக்குகளுடன் தற்போதைய நிலையில் இருக்கவும் வாய்ப்புகளை உருவாக்குவதே ஆகும்.

வணிக உறுப்பினர் அமைப்புகளின் கூட்டு முயற்சித் திட்டங்களின் கீழ், கைத்தொழில் துறைகள் மன்றம் (NCI), ஜேர்மன்-ஆசிய பசிபிக் வணிக கூட்டமைப்பின் (OAV) ஒத்துழைப்புடன், வணிக நிறுவனங்களுக்கு இடையேயான (B2B) பிணைப்பு மற்றும் வணிக நிறுவனங்களுக்கும் வாடிக்கையாளர்களுக்கும் இடையேயான (B2C) செயல்பாடுகளை மேற்கொள்ள ஏற்பாடு செய்தது.



**2023** ஆம் ஆண்டு செப்டம்பர் **1** முதல் **3** வரையிலான "தொழில் கண்காட்சி யாழ்ப்பாணம்" நிகழ்வில், நாட்டின் சரியான தொழில் நுட்ப வழங்குநர்களான கைத்தொழில் அபிவிருத்தி சபை (IDB) உடன் இணைந்து செயல்பட்டோம். யாழ் முற்றவெளி கண்காட்சி அரங்கின் பிரதான உள்கட்டமைப்புகளுக்கு மத்தியில், "ர" மண்டபத்தில் NCI குழுவினரால் மிரியம் ஹெஜரின் ஆதரவுடன் புதுமையான மற்றும் மிகவும் விரிவான அரங்கம் உருவாக்கப்பட்டதுடன் வண்ணமயமான உட்புற அலங்காரங்கள், இலக்கமயமாக்கப்பட்ட உத்வேகம் தரும் பதாகைகள் மற்றும் சுவரொட்டிகள் மூலம் பார்வையாளர்களின் கவனத்தை ஈர்த்து, தினசரி திட்டமிடப்பட்ட நிகழ்வுகளில் பங்கேற்க ஊக்குவிப்பதே இதன் நோக்கம்.

வலைபின்னல் நிகழ்வின் பங்கேற்பாளர்கள், பல்வேறு அமர்வுகளைத் தேர்ந்தெடுத்து தலைப்புகள் குறித்து விவாதித்து பரிந்துரைகளை உருவாக்கும் வாய்ப்பைப் பெற்றிருந்தனர்.

- SMES களுக்கு வங்கியிலிருந்து மென் கடன் வசதிகள்
- பொதியிடல்
- உயர்ந்த உற்பத்தி தொழில்நுட்பம் மற்றும் இயந்திரங்கள்
- கடல்வழி மற்றும் விமான சரக்கு கையாளுதல்
- விவசாயத்தில் Drone தொழில்நுட்பம்
- சுங்க வர்த்தக இணக்கம்
- உணவு கையாளுபவர்களுக்கான குறுகிய கால உணவு பாதுகாப்பு கற்கை நெறிகள்

வர்த்தகக் கண்காட்சியின் தோற்றத்தைச் சிறப்பாகக் காட்ட திறமையான மற்றும் நேர்த்தியான ஊழியர்கள் அவசியம். யாழ்ப்பாண பல்கலைக் கழக வணிகத் தொடர்புப் பிரிவு முகாமையாளருடனான கலந்துரையாடலின் அடிப்படை

யில் யாழ்ப்பாண பல்கலைக்கழ கத்தில் இருந்து 8 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டனர். அவர்கள் நன்கு பயிற்றுவிக்கப்பட்டவர்கள், கண்காட்சியில் கலந்து கொள்வதன் மூலம் அவர்கள் என்ன இலக்குகளையும் எதிர்பார்ப்பு களையும் அடைய விரும்புகிறார்கள் என்பதைப் பற்றியும் தெளிவாக இருந்தனர்.





**NCI உறுப்பினர்களுக்கான வர்த்தக கண்காட்சி அரங்கம்**

7 பெரிய அரங்குகள் வாங்கப்பட்டு, அவற்றில் 5 கடைகள் 10 NCI உறுப்பினர்களுக்கு குறைந்த விலையில் ஒதுக்கப்பட்டன. ஒவ்வொரு சிறிய நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கும் பெயர் பலகைகள், தயாரிப்புகளை காட்சிக்கு வைப்பதற்கான மேஜை துணிகள் மற்றும் சட்ட அலமாரி வழங்கப்பட்டன. இதன் மூலம், தயாரிப்புகளை ஆர்வமுள்ள வாடிக்கையாளர்களுக்குக் காண்பிப்பதற்கான ஒரு தளத்தை உருவாக்கியது. கைவினைப்பொருட்கள், பானங்கள், உணவு, நகைகள், உள்ளிட்ட பல்வேறு துறைகளிலிருந்து சிறிய நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் பங்கேற்றனர். B2B2C நிகழ்வு நடைபெற்றுக் கொண்டிருக்கும் அதே நேரத்தில், உற்பத்தியாளர்கள் தங்கள் தயாரிப்புகளை காட்சிப்படுத்தவும் மற்றும் ஒருவரையொருவர் தொடர்பு கொள்ளுதல் செயல்முறைகளில் ஈடுபட்டனர். இந்த நேரடி நிகழ்ச்சிகளின் மூலம், அந்தந்த வணிகங்களை திறமையாகவும், பயனும் தரக்கூடிய வழிமுறைகளிலும் தகுதியான விற்பனை வாய்ப்புகளை அடையாளம் காணவும், தொடர்பு தகவல்களை சேகரிக்கவும், மதிப்புமிக்க வணிக வாய்ப்புகளுக்கு வழிவகுக்கும் உரையாடலைத் தொடங்கவும் உதவியது.

**முகாமைத்துவ கற்கைகள் வர்த்தக பீடம் (FMSC) யாழ் பல்கலைக்கழகம் உடன் சிறிய நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கான (SMEs) கணக்கியல் வழிகாட்டல் திட்டம்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வர்த்தக பீடத்தின் (FMSC) ஒத்துழைப்புடன் NCI ஆனது யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள SMEகளுடன் ஒரு முன்னோடித் திட்டத்தை ஆரம்பித்தது. திட்ட காலம் ஆவணி தொடக்கம் ஐப்பசி 2023 வரை. சிறிய நடுத்தர தொழில் முயற்சியாளர்களின் திறன்களை மேம்படுத்தி, அவர்களின் நிதி மேலாண்மை மற்றும் வணிக திட்டமிடல் பற்றிய அறிவை வளர்ப்பதே இந்த திட்டத்தின் நோக்கமாகும். அதிகபட்சமாக 10 SMEகள் இந்த திட்டத்தில் பங்கேற்றன. ஒவ்வொரு SMEக்கும் 2 மாணவர் ஆலோசகர் மற்றும் ஒரு பேராசிரியர் ஒதுக்கப்பட்டனர், அவர்கள் SME களின் தேவைக்கேற்ப அடையாளம் காணப் பட்ட பகுதிகளில் ஆலோசனை வழங்கினர்.

துணைவேந்தர் பேராசிரியர் S. சிறிசத்குணராஜா, பீடாதிபதி பேராசிரியர் N. கெங்கத்தரன், சந்தைப்படுத்தல் துறை தலைவர் பேராசிரியர் எஸ். சிவானி மற்றும் பிற சிரேஷ்ட விரிவுரையாளர்கள் முன்னிலையில், NCI தலைவர் மற்றும் CEO ஆகியோருடன், FMSC உடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.



தொடக்கத்தில், அனைத்து SME களும் - ஆசீர் கிராம் ஸ்டோர்ஸ், லக்கி மல்டி ப்ரொடக்ட்ஸ், வில்வையடி ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ப்ரொடக்ட்ஸ், லக்ஷ்மி ப்ரொடக்ட்ஸ், என் ஃ பிளாஷ் சூப்பர் டிடர்ஜென்ட்ஸ், ஓம் மயூரா ப்ரொடக்ட்ஸ், சன் மிக்சர்ஸ், ஃபைவ் ஸ்டார் மிக்சர்ஸ், ஆஷா மிக்சர்ஸ் மற்றும் TDE டெய்லரிங் பங்கேற்க அழைக்கப்பட்டனர், ஒவ்வொரு SMEs ற்கும் தேவை மதிப்பீடு மேற் கொள்ளப்பட்டதுடன் SWOT பகுப்பாய்வும் தயாரிக்கப்பட்டது. SWOT பகுப்பாய்வில் கண்டறியப்பட்ட பலவீனங்கள் குறிகாட்டி களாகப் பயன்படுத்தப்பட்டு, ஒவ்வொரு சிறிய நடுத்தர தொழில் முயற்சியாளர்களிடமும் சென்று அவர்களின் அடையாளம் காணப்பட்ட பலவீனங்களை அடையாளம் காணவும், அவற் றிற்கான உத்திகளை உருவாக்கவும் நடவடிக்கை கள் எடுக்கப்பட்டன.



நடந்து கொண்டிருக்கும் செயல்பாடுகளை கண்காணிக்க பொறுப்பான விரிவுரையாளர்கள் மற்றும் மாணவர் ஆலோசகர்களுடன் மாதாந்த முன்னேற்ற மதிப்பாய்வு கூட்டம் நடத்தப்பட் டது. இது ஒரு பரீட்சார்த்த திட்டமாக இருந்தபோதிலும், இந்த திட்டத்தை பின்னர் வடக்கு மாகாணத்தின் மற்ற மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்துவதே நோக்கமாக இருந்தது. திட்டம் நிறைவடைந்தவுடன், வெளிப்புற நிபுணர்கள் (Faculty experts) ஒவ்வொரு SME உரிமையாளரையும் மதிப்பீடு செய்து, உறுதிப் படுத்தினர்.

குறிகாட்டிகள் அடையப்பட்டுள்ளனவா என்பதை வெற்றிகரமான SMEs களின் மாணவர் வழிகாட்டிகள் மற்றும் விரிவுரையாளர்கள் ஆகியோரால் அங்கீகரிக்கப்பட்டு நிறைவுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.



பல SMEs மிகச் சிறிய அளவில் செயல்பட்டு வருகின்றன, அவற்றின் தொழில்களில் சரியான கணக்கு மற்றும் கணக்குப் பராமரிப்பு முறை இல்லை. இவர்கள் தங்கள் நிறுவனங்களின் லாபத்தை கணக்கிட முயற்சிக்கும்போது கணிசமான சவால்களை எதிர்கொள்கிறார்கள். எனவே, அத்தியாவசிய அம்சங்களை உள்ள டக்கிய ஒரு அடிப்படை கணக்கு முறையை உருவாக்கும் நோக்கத்துடன் இந்த திட்டம் வடிவமைக்கப்பட்டது. அந்த அம்சங்கள்: நாளேடு பராமரிப்பு, பேரேடுகள் கடனாளர் மற்றும் கடன் வாங்கியவர் பேரேடுகள் உட்பட பண குறிப்பேடு புத்தகம், வங்கி புத்தகம், வங்கி அறிக்கை சரிபார்த்தல், செலவின கணக்கு, பல்வேறு புத்தகங்களை பராமரித்தல், ஆவணப் படுத்தல் போன்றன.

SME களின் ஒப்புதலுடன் களப்பயணங்கள் ஒழுங்கமைக்கப்பட்டன. களப்பயணங்களுக்கு மேலதிகமாக, மாணவர் வழிகாட்டிகள் SMEs களுடன் இணையவழி சந்திப்புகளை ஏற்பாடு செய்து நடவடிக்கைகளைத் தொடர்ந்து கண்காணித்தனர். கணக்குகளை மேற்கொள்ளும் போது ஏதேனும் சந்தேகம் இருந்தால் தொலை பேசியில் தொடர்பு கொள்ளுமாறு அவர்களைக் கேட்டுக் கொண்டனர். SMEs தினசரி அடிப் படையில் அனைத்து கணக்கு வழக்குகளையும் மேற்கொள்ள ஊக்குவிக்கப்பட்டன. மாணவர் வழிகாட்டிகள் வாரத்திற்கு ஒருமுறை அவர் களைச் சந்தித்து செயல்பாடுகளின் முன்னேற் றத்தைக் கண்காணித்தனர். சில சமயங்களில், அவர்கள் சிரமங்களை எதிர்கொள்ளும் போது விரிவுரையாளர்களிடமிருந்து வழிகாட்டலை நாடினர்.



### சிறிய நடுத்தர தொழில் முயற்சியாளர்களின் வெற்றிக் கதை காணொளி உருவாக்கம்

BMO திட்டத்தின் செயல்பாடுகள் ஒரு பகுதியாக, வடக்கு மாகாணத்திலுள்ள தனது உறுப்பினர்களுக்காக NCI வெற்றிக் கதை காணொளிகளை உருவாக்கியது. காணொளி தயாரிப்புகளில் நிபுணத்துவம் பெற்ற நிறுவனமான சாஹோ கிரியேஷன் (Saho Creations) இந்த திட்டத்திற்காக தேர்ந்தெடுக்கப் பட்டது. இலங்கையின் யாழ்ப்பாணத்தில் உள்ள BMO திட்டத்தின் வணிக மேம்பாட்டு நிபுணரின் வழிகாட்டுதல் மற்றும் ஆதரவோடு பெண் தொழில்முனைவோரை உள்ளடக்கிய பல்வேறு துறைகளைச் சேர்ந்த ஆங்கில மொழிபெயர்ப் புடன் கூடிய பத்து கதைகள் உருவாக்கப்பட்டன.

இந்த முன்னெடுப்பிற்காக உணவு உற்பத்தி, விவசாயம், இயற்கை வேளாண்மை, சுற்றுலா, நகை உற்பத்தி ஆகிய துறைகளைச் சேர்ந்த சிறிய நடுத்தர முயற்சியாளர்கள் தொழில் தேர்ந் தெடுக் கப்பட்டனர். தேர்வு செயல்பாட்டில் அனைத்து உறுப்பினர்களுக்கும் சமமான வாய்ப்புகள் வழங்கப்பட்டன.




இந்த விடயத்தில், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய நான்கு மாவட்டங்களில் இருந்து உறுப்பினர்கள் அவர் களின் வணிக வெற்றிக் கதை வீடியோக்களை உருவாக்குவதற்காக தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

மன்னார் மாவட்டத்தில் அடம்பன் இயற்கை பண்ணை மற்றும் கோகுலம் பனைசார் உற்பத் திப் பொருட்கள் முயற்சியாளர்கள் தெரிவு செய்யப்பட்டனர். கிளிநொச்சி மாவட்டத்தில் நேச்சர் வின்ஸ் மற்றும் அருண் என்டர்பிரைசஸ் தெரிவு செய்யப்பட்டன. முல்லைத்தீவு மாவட் டத்தில் SPK Rock மற்றும் R L Industries தெரிவு செய்யப்பட்டன. யாழ்ப்பாணம் மாவட்டத்தில் வில்வையடி ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் பொருட் கள், Maha Fashion Corner, D Villa Guest House மற் றும் Top ஆரோக்கியம் தெரிவு செய்யப்பட்டன.




அனைத்து வீடியோக்களும் மூன்று மாதங் களுக்குள் தயாரிக்கப்பட்டு NCI இன் அதிகாரப் பூர்வ இணையதளம் மற்றும் Facebook பக்கத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டன. வணிக வெற்றிக் கதைகள் NCI உறுப்பினர்களின் மீளெழுச்சி மற்றும் புதுமைத்திறனுக்கு சான்றாக விளங்கு கின்றன. அவர்கள் தங்கள் சாதனைகளை மட்டு மல்லாமல், தங்கள் தொழில்முனைவுப் பயணத் தில் மற்றவர்களுக்கும் உத்வேகமாக இருப்பார் கள் என்பதையும் காட்டுகிறார்கள்.

### BMO திட்டம் கட்டம் 1 நிறைவு விழா

ஜேர்மன் ஆசிய-பசிபிக் வணிக கூட்டமைப்பு (OAV), வடக்கிற்கான கைத்தொழில் துறைகள் மன்றம் (NCI) மற்றும் மகளிர் தொழிற்துறை மற்றும் வர்த்தக சம்மேளனம் (WCIC) ஆகியவற் றுடன் இணைந்து 2023ஆம் ஆண்டிற்கான BMO கூட்டு திட்டங்களுக்கான BMO திட்டம் கட்டம் 1 நிறைவு விழா நிகழ்வை அக்டோபர் 13ஆம் தேதி யாழ்ப்பாணத்திலுள்ள திண்ணை (Thinnai) ஹோட்டலில் ஏற்பாடு செய்தது.





NCI இயக்குநர் குழு, WCIC இயக்குநர்கள், பெண்கள் விவகாரங்கள், புனர்வாழ்வு, சமூக சேவை, கூட்டுறவு, உணவு விநியோகம் மற்றும் விநியோகம், தொழில்கள் மற்றும் தொழில் முன்னேற்றம் மற்றும் வர்த்தகம் ஆகியவற்றிற் கான பிரதம செயலாளரின் பிரதிநிதி திரு. வாகீசன் உள்ளிட்ட பல்வேறு பங்குதாரர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசு அதிகாரிகள், யாழ் மாவட்ட செயலாளர் திரு. சிவபாலசுந்தரன், முல்லைத்தீவு மாவட்டத்தின் கூடுதல் மாவட்ட செயலாளர் திரு. கனகேஸ்வரன், பீடாதிபதி திரு. கெங்கத்தரன் மற்றும் மற்றும் முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வர்த்தக பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் செல்வி. சாதனா வைகுந்தவாசன், கைத்தொழில் அபிவிருத்தி சபையின் மாகாண பணிப்பாளர் திரு. கெங்கத்தரன், ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் உதவி பணிப்பாளர் திரு. கனோஜன் மற்றும் பங்காளர் நிறுவனங்கள், NCI மற்றும் WCIC அங்கத்தவர்கள் ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர். நிகழ்ச்சி மாலை 4 மணிக்கு ஆரம்பித்து இரவு 8 மணிக்கு நிறை வடைந்தது.


### லங்காபேக் (Lanka Pack) கண்காட்சியும் கள ஆய்வுப் பயணமும்

வடக்கிற்கான கைத்தொழில் துறைகள் மன்றம் (NCI), BMO திட்டத்தின் கீழ் NCI-OAV ஒத்துழைப்புடன், கொழும்பில் நடைபெற்ற "லங்கா பேக்" என்ற கண்காட்சிக்கு ஒரு கள ஆய்வு பயணத்தை ஏற்பாடு செய்தது.

கண்காட்சியின் கருப்பொருள் 7Ps மையமாக கொண்டது: காகிதம், பிளாஸ்டிக், அச்சிடுதல், பதப்படுத்துதல், பேக்கேஜிங், தயாரிப்பு மற்றும் ஊக்குவிப்பு. ஏப்ரல் 2023 இன் தொடக்கத்தில் நடத்தப்பட்ட தேவை மதிப்பீட்டின் அடிப்படை யில் இந்த கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டது, இதில் பெரும்பாலான NCI உறுப்பினர்கள் கள ஆய்வு பயணகளுக்கு விருப்பம் தெரிவித்தனர். NCI இன் அதிகாரப்பூர்வ WhatsApp குழு மூலம் கண்காட்சியில் பங்கேற்க உறுப்பினர்களிடம் ஆர்வத்தை வெளிப்படுத்துமாறு கோரப்பட்டது.



இந்தக் கண்காட்சி 2023 ஒக்டோபர் 26 முதல் 28 வரை பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில்(BMICH) நடைபெற்றது. NCI 27 மற்றும் 28 ஆம் தேதிகளில் விஜயம் செய்ய திட்டமிட்டிருந்தது. குழுவில் தலைவர், இயக்குநர்கள் மற்றும் உறுப்பினர்கள் அடங்கு வர். கண்காட்சி மையத்திற்குள், 75 முதல் 100 வரையிலான பொதியிடல் மற்றும் இயந்திரம் தொடர்பான நிறுவனங்கள் தங்கள் தயாரிப்பு களை பெருமையுடன் காட்சிப்படுத்தின.



கண்கவர்ந்த அலங்காரங்களுடனும் கவர்ச்சி கரமான அரங்கு வடிவமைப்புகளுடனும் காட்சி அரங்கம் அமைக்கப்பட்டிருந்தது, அது பார்வை யாளர்களின் கவனத்தை ஈர்த்தது. கண்காட்சியில் கலந்துகொண்டவர்கள் காட்சிப்படுத்தப்பட்ட பொருட்களை ஆய்வு செய்தல் காட்சியாளர்களு டன் பொருள் விலைகள் குறித்து விவாதித்தல், செயல்முறை விளக்க காணொளிகளைப் பார்த்து, வணிக பரிமாறிக்கொண்டு, அட்டைகளைப் பரிமாற்றிக்கொண்டு, இயந்திரங்களை வாங்கு வதற்கான இறுதி முடிவை எடுத்தல் என ஒவ் வொரு அரங்கையும் சுற்றிப்பார்த்தனர்.



உயர்தர இயந்திரங்களை அடையாளம் காண்பதில் அனுபவம் இல்லாத பெண் தொழில் முயற்சியாளர்களுக்கு உதவி செய்வதிலும், காட்சிப்படுத்தப்பட்ட தெரிவுகளில் சரியானதை தேர்வு செய்ய வழிநடத்துவதிலும் NCI தலைவர் முக்கிய பங்கு வகித்தார்.

இவர்களில் பெரும்பாலானோருக்கு இது ஒரு பெரிய பொதியிடல் கண்காட்சிக்கு சென்ற முதல் அனுபவமாக இருந்தது. பல உறுப்பினர்கள் போக்குவரத்து, உணவு மற்றும் தங்குமிடம் உட்பட சிறப்பாக ஒழுங்குபடுத்தப்பட்ட

ஏற்பாடுகளை பாராட்டினர். உறுப்பினர்கள் அனைத்து தயாரிப்புகளையும் பார்வையிடு வதற்கு தங்களுக்கு "நேரம் கிடைத்ததால் மிகவும் பாராட்டினார்கள். மொத்தத்தில், NCI க்கு அவர் கள் செலுத்திய பணத்திற்கு இது மிகவும் மதிப்பு மிக்கது என்று அவர்கள் தெரிவித்தனர்.

### NCI திறன் மேம்பாட்டு பயிற்சி திட்டங்கள் மற்றும் பயிற்சிகள்

திறன்கள் மற்றும் திறன்களை தொடர்ந்து மேம்படுத்துவதில் தங்கியுள்ளது. வடக்கு மாகாணத்தில் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பதில் NCI இன் உறுதிப்பாட்டின் ஒரு பகுதியாக, ஜேர்மன் ஆசிய-பசிபிக் வணிகக் கூட்டமைப்பு (OAV) ஏற்பாடு செய்த வணிக உறுப்பினர் அமைப்பு (BMO) திட்டத்தின் கீழ் பல்வேறு திறன் மேம்பாட்டு பயிற்சிகளில் நாங்கள் தீவிரமாக பங்கேற்றோம்.

எங்கள் இயக்குநர்கள் மற்றும் தலைமைச் செயல் அதிகாரி ஆகியோர் இந்த பட்டறைகளில் கலந்துகொண்டனர். இன்றைய வணிகச் சூழலின் சிக்கல்களை எதிர்கொள்ள எங்கள் குழுவுக்கு அவசியமான ஆழமான புரிதல், நிபுணத்துவம் மற்றும் சிறந்த நடைமுறைகளை வழங்குவதற்காக மூலோபாய ரீதியாக இந்த திறன் மேம்பாட்டு பயிற்சிகள் வடிவமைக்கப்பட்டமையால் எங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருந்தன. இந்த திறன் பயிற்சிகள், OAV ஆல் வடிவமைக் கப்பட்டுள்ளதுடன், எமது தேவைக்கு ஏற்ற பயிற்சிகளை எங்களுக்கு வழங்குவதிலும், செயல் பாட்டு திறனை மேம்படுத்துவதிலும், நிலையான வர்த்தக நடைமுறைகளை ஊக்குவிப்பதிலும் முக்கிய பங்கை வகித்தன.

எங்கள் வருடாந்த அறிக்கையின் இந்த சிறப் புப் பகுதியில் இந்த திறன் மேம்பாட்டு பயிற்சி திட்டங்கள் மூலம் மேற்கொள்ளப்பட்ட மாற்றத் தின் மீது கவனம் செலுத்துகிறோம். ஒவ்வொரு பயிற்சிகளும் துறை சார்ந்த நிபு ணர்கள், மற்றும் தங்கள் துறைகளில் தேர்ச்சி பெற்ற நிபுணர்களால் வடிவமைக்கப்பட்டதுடன் எளிதான மற்றும் அதி வேக கற்றலுக்கான ஒரு தளமாக செயல்பட்டது.

எங்கள் திறன் மேம்பாட்டு பயிற்சிகளின் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு:

### தரவுத்தள மேம்பாட்டில் தேர்ச்சி பெறுதல்: ஒரு பட்டறை அனுபவம்

சிறப்பாக உருவாக்கப்பட்ட தரவுத்தள அமைப்பானது ஒரு நிறுவனத்தின் செயல்திறன், பாதுகாப்பு மற்றும் ஒட்டுமொத்த வெற்றிக்கும் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்குகின்றது. NCI இன் அனைத்து இயக்குநர்களும் கலந்து கொள்ளும் வகையில், OAV நிறுவனத்தால், BMO திட்டத்தின் கீழ், ஃபெப்ரவரி 22 முதல் 24 வரை மூன்று நாள் கருத்தரங்கம் ஒன்று ஹோட்டல் திண்ணையில் ஏற்பாடு செய்யப்பட்டது.


OAV நிறுவனத்திலிருந்து, இலங்கையின் வடக்கு நீண்ட கால நிபுணர் மிரியம் ஹெட்ஜர், சந்தைப்படுத்தல் மற்றும் மக்கள் தொடர்புக்கான நிர்வாக உதவியாளர் ஃபெலிக்ஸ் ரஸ்ட் மற்றும் உறுப்பினர் ஆதரவு திட்ட முகாமையாளர் கிறிஸ்டியன் லுட்விக் ஆகியோர் பயிற்சியாளர் களாக கலந்து கொண்டனர்.



அமர்வின் போது உறுப்பினர்கள், பங்குதாரர் கள், நிறுவன பங்காளர்கள் மற்றும் சாத்தியமான உறுப்பினர்களுக்கான தரவுத்தளங்கள் உருவாக் கப்பட்டன. அதற்கு மேலதிகமாக வடக்கு மாகாணத்தில் உள்ள சாத்தியமுள்ள துறைகளை அடையாளம் காண்பது பற்றியும் கலந்துரை யாடப்பட்டது.

### இணையத்தளம் உருவாக்கம் குறித்து பயிற்சி

மார்ச் 26 மற்றும் 27ஆம் திகதிகளில் NCI இற்கான இணைளத்தள உருவாக்கத்தில் நிபுணரான இன்கா என்பவரால் ஒரு நடாத்தப் பட்டது இதில் BMO திட்ட இலங்கையின் வடக்கு மாகாணத்திற்கான நீண்ட கால நிபுணர் இயக்குநர் குழு CEO மற்றும் இணையத்தள மேம் பாட்டில் நிபுணரான NCI உறுப்பினர் ஆகியோர் கலந்து கொண்டனர் கூடுதலாக லிஸ்ரிஸ் (LIZRIS) என்ற இணையத்தள மேம்பாட்டு நிறுவனமும் இந்த பட்டறையில் பங்கேற்றது.



## செயல் திட்டம் எழுதல் மற்றும் இளம் தொழில் முனைவோர் பயிற்சிப் பட்டறை

OAV நிறுவனம் BMO கூட்டு திட்டத்தின் கீழ் கொழும்பில் உள்ள கொட்டல் கலதாரியில் ஆகஸ்ட் 22 முதல் 24 வரை இரண்டரை நாள் பட்டறை ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. OAV இனால் NCI மற்றும் WCIC இரண்டையும் இணைத்து இப் பயிச்சி பட்டறைக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. NCI இன் ஆறு இயக்குநர்களும் CEO அவர்களும் இந்தப்பட்டறையில் கலந்து கொண்டனர். OAV இன் ஆசிய பிராந்திய முகாமையாளர் லைப் லக்மன் ஆகியோர் முறையே திட்டம் எழுதுதல் மற்றும் இளம் தலைவர்கள் திட்ட பயிற்சிக்கு வசதி செய்தனர் மிரியம் செட்ஜர் பங்கேற்பாளர்களுக்காக உணவு தங்குமிடம் மற்றும் போக்குவரத்து ஏற்பாடுகளை செய்து இருந்தார்.



BMO திட்டத்தின் திறன் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் இந்த பயிற்சிப் பட்டறை திட்டமிடப்பட்டுள்ளது. தலைவர் மற்றும் தலைமைச் செயல் அதிகாரி உட்பட ஆறு இயக்குநர்களை கலந்து கொண்டனர்.

முன்மொழிவுகள் எழுதும் பயிற்சியில் விவாதிக்கப்பட்ட முக்கிய அம்சங்களாவன முன்மொழிவு உள்ளடக்கம், சாத்தியமான நன்கொடையாளர்களை ஆய்வு செய்தல் பொருத்தமான நன்கொடையாளர்களை அடையாளம் காணுதல் மற்றும் ஒரு முன்மொழிவை எழுதும் போது கருத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள்.

இளம் தலைவர்கள் பயிற்சியில் இளம் தலைவர்களின் உருவாக்கம் மற்றும் இந்தக் குழுவின் வரையறை போன்ற தலைப்புக்கள் உள்ளடக்கப்பட்டன இதில் வயது பிரிவுகள் பற்றிய விவாதங்களும் அடங்கும்.

மூன்றாம் நாள் அமர்வின் மிகுதி நாளில் NCI இனால் ஒழுங்குபடுத்தப்படும் நிகழ்ச்சிகளை எவ்வாறு திறம்பட முகாமை செய்வது பற்றி கலந்துரையாடப்பட்டது.

## NCI நிறுவனக் கட்டமைப்பு மேம்பாடு பற்றிய பயிற்சிப் பட்டறை

2023 செப்ரம்பர் மாதம் 13,14,15ம் திகதிகளில் திண்ணை விடுதியில் வடக்கிற்கான கைத்தொழில் துறைகள் மன்றத்தினை மேலும் நிறுவன கட்டமைப்பு ரீதியாக எவ்வாறு மேம்படுத்தலாம் என்பது குறித்து பயிற்சிப் பட்டறை நடைபெற்றது. தற்போது காணப்படும் கட்டமைப்பு தனது அங்கத்தவர்களின் தேவைகளை முழுமையாகப் பர்த்தி செய்ய முடியாத நிலையில் உள்ளது. ஜேர்மனியைச் சேர்ந்த ஒரு நிபுணர் மரெய்க் பிராண்ட் இந்த பட்டறையை வழி நடத்தினார்.



1. NCI இயக்குநர்களை ஊக்குவித்தல்
2. தனித்துவமான விற்பனை யோசனை
3. NCI பலங்கள் பலவீனங்கள் வாய்ப்புக்கள் மற்றும் அச்சுறுத்தல்களை அடையாளம் காணுதல் (SWOT)
4. CEO பதவியின் பங்கு மற்றும் அவரின் தொழில் விபரங்கள்
5. இயக்குநர்களின் பங்கு மற்றும் பொறுப்புக்கள்
6. நிறுவன கட்டமைப்பு மாதிரியின் வளர்ச்சி
7. இயற்கை விவசாய அபிவிருத்தி

குறிப்பிட்ட தலைப்புகளுக்கு மேலதிகமாக பங்கேற்பாளர்கள் NCI இன் யாப்பு பற்றிய விவாதங்களில் ஈடுபட்டனர். சந்தேகங்களைத் தெளிவுபடுத்தி, அமைப்புக்கான பல்வேறு வருமானம் ஈட்டும் வழிகளை ஆராந்தனர். பட்டறையில் பங்கேற்பு ரீதியான முறைகள் கையாளப்பட்டன. அதில் குழு நடவடிக்கைகள் விளக்கக்காட்சிகள் ஆகியவை அடங்கும். தலைவர் இயக்குநர்கள் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி ஆகியோரின் தீவிர பங்கேற்புடன் இது நடைபெற்றது.



31 பங்குனி 2023 இல் முடிவடைந்த ஆண்டிற்கான

நிதி அறிக்கை

**Peninsula Consultants**
Chartered Accountants
K Kenthiran
MBA, FCA, BSc (Acc) Sp, Dip in Bank & Fin
#29/34 Church Lane, Oddumadam Road, Jaffna Tel: 0717511936 Email: cajaffna@gmail.com Regd.No WH 58546

**INDEPENDENT AUDITORS REPORT**
**TO THE MEMBERS OF NORTHERN CHAMBER O INDUSTRIES**

**Opinion**
We have audited the financial statements of **NORTHERN CHAMBER O INDUSTRIES**, which comprise the statement of financial position as at March 31, 2023, and the statement of income and expenditure and cash flow for the year then ended, and notes to the financial statements, including a summary of significant accounting policies as set out on pages 4 to 10.

In our opinion, the accompanying financial statements give a true and fair view of the financial position of the Chamber as at March 31, 2023, and of its financial performance and cash flow for the year then ended in accordance with the Sri Lanka Accounting Standards and Sri Lanka Statement of Recommended Practices for Not-for-Profit Organizations

**Basis for Opinion**
We conducted our audit in accordance with Sri Lanka Auditing Standard (SLAuS) for the Audits of Non Specified Business Enterprises (Non- SBEs), which require that we plan and perform the audit to obtain reasonable assurance about whether the said financial statements are free of material misstatements. An Audit includes examining, on a test basis, evidence supporting the amounts and disclosures in the said financial statements, assessing the accounting principles used and significant estimates made by the management, evaluating the overall presentation of the financial statements, and determining whether the said financial statements are prepared and presented in accordance with Sri Lanka Accounting Standards and Sri Lanka Statement of Recommended Practices for Not-for-Profit Organizations. We have obtained all the information and explanations, which to the best of our knowledge and belief were necessary for the purposes of our audit. We therefore believe that our audit provides a reasonable basis for our opinion.

**Respective Responsibilities of Directors and Auditors.**
The directors responsible for maintaining proper accounting records, preparing and presenting these financial statements in accordance with the Sri Lanka Accounting Standards and Sri Lanka Statement of Recommended Practices for Not-for-Profit Organizations. Our responsibility is to express an opinion on these financial statements, based on our Audit.

**Report on Other Legal and Regulatory Requirements1**
As required by section 163 (2) of the Companies Act No. 07 of 2007, and as far as appears from our examination, proper accounting records have been kept by the Chamber.

Peninsula Consultants
January 3, 2024
Jaffna

**NORTHERN CHAMBER OF INDUSTRIES**
**STATEMENTS OF FINANCIAL POSITION**
**AS AT MARCH 31, 2023**

| | Note | 2023 Rs. |
|---|---|---|
| **Non Current Assets** | | |
| Plant and Equipment | 1 | 1,126,300 |
| | | **1,126,300** |
| **Current Assets** | | |
| Rent Deposits | | 237,500 |
| Cash at Bank | 2 | 107,650 |
| | | **345,150** |
| **Total Assets** | | **1,471,450** |
| **Funds and Liabilities** | | |
| Accumulated Funds | 3 | (370,557) |
| Capital Grants | 4 | 1,062,860 |
| | | **692,303** |
| **Current Liabilities** | | |
| Loan from members | 5 | 673,000 |
| | | **673,000** |
| **Current Liabilities** | | |
| Accrued Expenses | | 106,147 |
| | | **106,147** |
| **Total Funds and Liabilities** | | **1,471,450** |

It is certified that the Financial Statements have been prepared in compliance with Sri Lanka Accounting Standards and Sri Lanka Statement of Recommended Practices forNot-for-Profit Organizations . The Directors are responsible for the preparation and presentation of these Financial Statements. Approved and signed on behalf of the Board Directors,

□□□□□□□.. □□□□□□□..
Chairman Director

January 3, 2024
Jaffna

The Financial Statements are to be read in conjunction with the related notes, which form an integral part of the Financial Statements of the Chamber as set out on pages 4 to 10.

The Chamber commenced its commercial operations in November 2022.

**NORTHERN CHAMBER OF INDUSTRIES**
**STATEMENTS OF INCOME AND EXPENSES**
**FOR THE YEAR ENDED MARCH 31, 2023**

| | | 2023<br>Rs. |
|---|---|---|
| **Income** | | |
| Membership Fees | | 173,000 |
| Amortization of Capital Grants | 4 | 318,340 |
| **Total income** | | **491,340** |
| | | |
| **Expenses** | | |
| Company Secretarial Fees / Incorporation Charges | | 82,918 |
| Personnel costs | | 105,800 |
| Telephone and internet charges | | 20,639 |
| Rent | | 25,000 |
| Electricity charges | | 10,008 |
| Advertising expenses | | 24,300 |
| Printing and stationery | | 21,487 |
| Office renovation and maintenance expenses | | 188,901 |
| Auditors Remuneration | | 40,000 |
| Refreshment expenses | | 4,994 |
| Travelling expenses | | 2,400 |
| Depreciation | | 334,200 |
| Bank Charges | | 1,250 |
| **Total expenses** | | **861,897** |
| | | |
| **Surplus / (Deficit)** | | **(370,557)** |
| | | |
| Income Tax | 6 | - |
| | | |
| **Net surplus/(Deficit)** | | **(370,557)** |

The Financial Statements are to be read in conjunction with the related notes, which form an integral part of the Financial Statements of the Chamber as set out on pages 4 to 10.

**NORTHERN CHAMBER OF INDUSTRIES**
**CASH FLOW STATEMENT**
**FOR THE YEAR ENDED MARCH 31, 2023**

| | 2023 Rs. |
|---|---|
| **CASH FLOWS FROM OPERATING ACTIVITIES** | |
| **Surplus /(Deficits) for the Year** | (370,557) |
| Adjustments for; | |
| Depreciation | 334,200 |
| Amortization of Grants | (318,340) |
| **Operating Profit Before Working Capital Changes** | **(354,697)** |
| **Changes in Working Capital** | |
| Change in Rent Deposits | (237,500) |
| (Increase) / Decrease in Accrued expenses | 106,147 |
| **Net Cash Flow Generated from Operating Activities** | **(486,050)** |
| | |
| **CASH FLOWS FROM INVESTING ACTIVITIES** | |
| Purchase of Plant and Equipment | (1,460,500) |
| **Net Cash Flow Generated from / (Used in) Investing Activities** | (1,460,500) |
| | |
| **CASH FLOWS FROM FINANCING ACTIVITIES** | |
| Loan received | 723,000 |
| Loan repaid | (50,000) |
| Capital Grants Received | 1,381,200 |
| **Net Cash Flow Used in Financing Activities** | **2,054,200** |
| | |
| Net Increase in Cash & Cash Equivalents | 107,650 |
| Cash & Cash Equivalents at the Beginning of the year | - |
| Cash & Cash Equivalents at the End of the year | **107,650** |

Figures in brackets indicate deductions

The Financial Statements are to be read in conjunction with the related notes, which form an integral part of the Financial Statements of the Chamber as set out on pages 4 to 10.

**NORTHERN CHAMBER OF INDUSTRIES**
**NOTES TO THE FINANCIAL STATEMENTS**
**FOR THE YEAR ENDED MARCH 31, 2023**

## 1 PLANT AND EQUIPMENT

| | Office equipment Rs. | Furniture and Fittings Rs. | Computer Equipment Rs. | Air Conditioner | Name Board | Total Rs. |
|---|---|---|---|---|---|---|
| **Cost** | | | | | | |
| **Balance as at April 1, 2022** | - | - | - | - | | - |
| Additions during the year | 33,000 | 405,200 | 842,000 | 150,000 | 30,300 | 1,460,500 |
| **Balance as at March 31, 2023** | **33,000** | **405,200** | **842,000** | **150,000** | **30,300** | **1,460,500** |
| **Accumulated Depreciation** | | | | | | |
| **Balance as at April 1, 2022** | - | - | - | - | | - |
| Additions during the year | 6,600 | 81,040 | 210,500 | 30,000 | 6,060 | 334,200 |
| **Balance as at March 31, 2023** | **6,600** | **81,040** | **210,500** | **30,000** | **6,060** | **334,200** |
| **Net Book Value** | | | | | | |
| **Balance as at March 31, 2023** | **26,400** | **324,160** | **631,500** | **120,000** | **24,240** | **1,126,300** |

The following assets were received as a grants and capitalized during the year under review. The capital grants related to the assets were amortized over the useful life of those assets

| | Cost | Amortized for The Year |
|---|---|---|
| Air Conditioner A/C | 150,000 | 30,000 |
| Computer equipment A/C | 842,000 | 210,500 |
| Furniture and Fittings A/C | 389,200 | 77,840 |
| | **1,381,200** | **318,340** |

| | | 2023 |
|---|---|---|
| **2** | **Cash at Bank** | |
| | Seylan Bank - Current Account | 107,650 |
| | | **107,650** |
| **3** | **Accumulated Funds** | |
| | As at the Beginning of the year | - |
| | Surplus or (deficits) for the year | (370,557) |
| | As at the end of the year | **(370,557)** |
| **4** | **Capital Grants** | |
| | Grants Received During the year | 1,381,200 |
| | Grants amortized during the year | (318,340) |
| | Balance at the end of the year | **1,062,860** |
| **5** | **Loans from Members** | |
| | Loans Received During the year | 723,000 |
| | Loans repaid during the year | (50,000) |
| | Balance at the end of the year | **673,000** |

**6 Income Tax**

No provision were made for income tax in iew of carried orward tax losses

**7 EVENTS OCCURRING AFTER THE REPORTING DATE**

**7.1 COMMITMENTS**

There were no material capital commitments as at the reporting date.

**7.2 CONTINGENT LIABILITIES**

There are no material contingent liabilities outstanding as at the reporting date which require adjustments to or disclosure in the Financial Statements

NORTHERN CHAMBER OF INDUSTRIES

54, Clock Tower Lane, Jaffna

021 222 6331 0774752416 0741694673

northern chamber of industries sri lanka

northernchambersl.com